பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 16 புதன்கிழமை (30-05-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:185

# சமாதான முயற்சி தொடரும்

# சந்திரிகா நேற்று அறிவிப்பு

## சமரசத் தீர்வில் தமது அரசு அக்கறை கொண்டுள்ளதாம்

கொழும்பு,மே30

**சமாதான முயற்சிகள் தொடர்பாகத் தாமும் தமது அரசும் கொண்டுள்ள அக்கறையிலும் ஈடுபாட்டிலும் எந்தவித மாற்றமும் இல்லை என்று அறிவித்துள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, சமாதான முயற்சிகள் தொடரும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.**

நேற்று மாலை 'ரூபவாஹினி' தொலைக்காட்சி மூலம் நாட்டு



•மக்களுக்கு ஆற்றிய உரையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

கடந்த 14 வருட காலத்தில் தற்போதுதான் சமாதானத்துக்கான உகந்த சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, பேச்சை முறிப்பதற்குப் புலிகள் முயற்சிப்பதாகக் குற்றஞ்சாட்டினார்.

"சகல இன மக்களினதும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் புதிய அரசமைப்பு ஒன்றை அரசு அறிமுகப்படுத்திய போதிலும் தேர்தல் காலத்தில் அது இடைநிறுத்தப்பட்டது. இருந்த போதிலும் வெகு விரைவில் அந்த வேலைத்திட்டம் மீண்டும் ஆரம்பமாகும்" - என்றும் அந்த உரையில் ஜனாதிபதி தெரிவித்தார்.

புலிகளுடன் மேற்கொள்ளவுள்ள பேச்சுக்கள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து அந்த உரையில் ஜனாதிபதி கருத்துக்களைத் தெரிவித்தார்.

"நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்திருப்பதாக எதிர்க்கட்சி கூறி வருவது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. இது அபிவிருத்திக்கு முட்டுக்கட்டை போடும் செயலாகும்" - என்றும் அவர் கூறினார்.

யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வொன்றை பெறுவதற்காக பேச்சுக்கு வருமாறு விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி, யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து சிறுபான்மையினர் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து, நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு தாம் எப்போதும் தயார் என்றும் அந்த உரையில் அவர் தெரிவித்துள்ளார்.

எந்த ஓர் இனத்திற்கும் அநீதி ஏற்படாத வகையில் பேச்சு மூலம் தீர்வு ஒன்றை எட்டுவதற்கும் தான்

(14 ஆம் பக்கம் பார்க்க)

### தவறுதலான வெடிவிபத்தில் உயிரிழப்பு

தென்மராட்சி,மே30

ஈ.பி.டி.பியின் புங்குடுதீவு அலுவலகத்தில் நேற்று முன்தினம் இரவு தவறுதலாக இடம்பெற்ற வெடிவிபத்துச் சம்பவம் ஒன்றில் அந்தக் கட்சியின் பகுதிநேர உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தார்.

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் ஜெராஸ்ட் அன்ரனி என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த நபரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (உ-7-117-139)



கடந்த 17 ஆம் திகதி வன்னியில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் சந்தித்த போது எடுக்கப்பட்ட படம். இடமிருந்து வலமாக விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் செ.தமிழேந்தி, காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க், நோர்வே வெளியுறவுத்துறை அமைச்சின் பிரதிநிதியான கேஸ்டி அம்மையார் ஆகியோர் காணப்படுகின்றனர்.

### பாதிரிமார் சீருடையில் வந்த இருவரால்

## புளொட் உறுப்பினர் நேற்று மன்னாரில் சுட்டுக் கொலை

மன்னார்,மே30

மன்னார் நகரப் பகுதியில் வைத்து நேற்று இரவு 7.30 மணியளவில் புளொட் அமைப்பின் முக்கிய பிரமுகர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கோப்பாயைச் சேர்ந்த அருந்தவராசா தமிழ்வாசன் (வாசன் - வயது 35) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

மன்னார் நகரப் பகுதியில் உள்ள புளொட் அமைப்பின் அலுவலகத்தில் இருந்து பெரியகடை வீதியில் உள்ள தனது வீட்டுக்குச் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் கிறிஸ்தவ பாதிரிமார் அணியும் சீருடையில் வந்த இருவரால் இவர் சுட்டுக்கொல்லப்பட்டார் எனப் புளொட் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (க-7)

## வங்கி முகாமையாளரின் இடமாற்றத்தை ஆட்சேபித்து இன்று நகரில் ஊர்வலம்

### யாழ். வணிகர் கழகம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே30

மக்கள் வங்கி வடவலய உதவிப் பொதுமுகாமையாளர் க.திருநாவுக்கரசுவின் இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு கோரி யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்நகரில் இன்று காலை ஊர்வலம் ஒன்று நடைபெறவுள்ளது.

யாழ்குடாநாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த வர்த்தகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பலர் இந்த ஊர்வலத்தில் கலந்து கொள்வர்.

யாழ்சத்திரத்துச் சந்தியில் உள்ள ஞானவைரவர் ஆலயத்தின் முன்பாக இருந்து ஆரம்பமாகும் இந்த ஊர்வலம் ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதியூடாக ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்டத் தலைமைச் செயலகத்தைச் சென்றடையும்.

உதவிப் பொது முகாமையாளர் க.திருநாவுக்கரசுவின் இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு கோரும் மகஜர் ஒன்றும் அங்கு வைத்து வணிகர் கழகப் பிரதிநிதிகளால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர், இணுவில், மருதனார்மடம், நெல்லியடி, புலோலி, பருத்தித்துறை, சுன்னாகம் ஆகிய வணிகர் கழகங்களின் பிரதிநிதிகளும் இந்த ஊர்வலத்தில் கலந்து கொள்வர். (க-7-5)

## நகரில் கடையடைப்புக்கு வணிகர் கழகம் அழைப்பு

யாழ்ப்பாணம்,மே30

மக்கள் வங்கி வடவலய உதவிப் பொதுமுகாமையாளர் க.திருநாவுக்கரசுவின் இடமாற்றத்தை ஆட்சேபித்து யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தினர் இன்று அரைநாள் கடையடைப்பு செய்யவுள்ளனர்.

இது தொடர்பாக வணிகர் கழகத்தினால் நேற்று வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மக்கள் வங்கி வடவலய உதவிப் பொதுமுகாமையாளர் க.திருநாவுக்கரசுவின் திடீர் இடமாற்றத்தை ரத்துச் செய்யும்படி கோரி நாம் பல வழிகளி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜன் படுகொலைச் சம்பவம்:

## சி.ஐ.டி. விசாரணை அறிக்கை இன்று யாழ்.நீதிமன்றில் தாக்கல்

யாழ்ப்பாணம்,மே30

பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணை அறிக்கை இன்று யாழ்.நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நிமலராஜன் படுகொலைச் சம்பவம் இடம்பெற்று 7 மாதங்கள் கடந்து விட்ட போதிலும் சந்தேக நபர்கள் எவரும இதுவரையில் கைது செய்யப்படவில்லை.

பொலஸ்மா அதிபரின் பணிப்புரையின் பிரகாரம் கடந்த மாதம் யாழ்ப்பாணம் வந்திருந்த குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசேட குழுவொன்று ஒரு மாத காலம் தங்கியிருந்து விசாரணைகளை மேற்கொண்டு ஆறு பேரின் வாக்குமூலங்களைப் பதிவு செய்தது.

இந்தக் கொலை தொடர்பான விடயம் இன்று யாழ்.நீதிமன்றத்தில் எடுக்கப்படவுள்ளது. அப்போதே குற்றப் புலனாய்வுத் துறையினரின் அறிக்கை அங்கு சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-9)

## திருமலை கடற்படைத் தளத்திற்கு தளபதிகளுடன் ரத்வத்த விஜயம்

கொழும்பு,மே30

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்த தலைமையில் படைத்தளபதிகள் குழு ஒன்று நேற்று முன்தினம் திருகோணமலைக்கு அவசரமாகச் சென்று திரும்பியுள்ளது.

முப்படைத் தளபதிகளும், கூட்டுப்படைத்தளபதி ஜெனரல் றொகான் தலுவத்தவும் பொலீஸ்மா அதிபரும் ஜெனரல் ரத்வத்தவுடன் திருகோணமலை கடற்படைத்தளத்திற்குச் சென்று திரும்பியுள்ளார்கள்.

கிழக்கில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதை அடுத்து - அங்கு அவர்களது தாக்குதல் நடவடிக்கைகள் அதிகரிக்கலாம் என்ற எதிர்பார்ப்பில் - அது குறித்து ஆராயவே இவர்கள் அங்கு அவசர விஜயம் மேற்கொண்டதாகத் தெரியவருகிறது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

### 2 எலும்புக்கூடுகள் கிளிநொச்சியில் மீட்பு

வவுனியா,மே30

கிளிநொச்சி திருநகர் பகுதியில் உள்ள வீடொன்றின் மலசலகூடக் குழியில் இருந்து நேற்று மேலும் இரண்டு மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த போது 184 பொது மக்கள் காணாமற் போயிருந்தனர் என்றும் -

அவர்களில் இதுவரை 67 பேரின் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன என்றும் - புலிகளின் குரல் வானொலி நேற்றிரவு அறிவித்தது. (க-7)

## குடாநாட்டு மீனவர் பிரச்சினை; கொழும்பில் உயர்மட்ட மாநாடு

### அமைச்சர் ராஜபக்ஷ தலைமையில்

கொழும்பு,மே30

யாழ்.மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கென எதிர்வரும் 7ஆம் திகதி கொழும்பில் உயர்மட்ட மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

கடற்றொழில், நீரியல் வளத்துறை அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத்தில் இந்த மாநாடு நடத்தப்படவுள்ளது.

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள், சமூகசேவை நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்து கொள்வர்.

இந்த மாநாட்டில் குடாநாட்டு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டு முக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (க-3-7)

## ஒரு கோடி ரூபா செலவில்

# யாழ்.ஆஸ்பத்திரியில் விரைவில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு

## அமைச்சர் டக்ளஸ் நட[illegible]க்கை

யாழ்ப்பாணம்,மே30

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சின் நிதியுதவியுடன் 1 கோடி ரூபா செலவில் இந்தப் புற்றுநோய் பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், சுமார் 50 முதல் 75 பேர்வரை இப்பிரிவில் தங்கியிருந்து சிகிச்சை பெற வசதியளிக்கப்படும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழையில் இயங்கிவந்த புற்றுநோய் மருத்துவமனை 80களின் இறுதிப் பகுதியில் குடாநாட்டில் தீவிரமடைந்த யுத்தத்தை அடுத்து முற்றிலுமாகச் சேதமடைந்தது. இதன் பின்னர் புற்று நோய்க்குச் சிகிச்சை அளிக்கப் பயன்படுத்தப்படும் கதிர் வீச்சு இயந்திரங்கள் யாழ்.போதனா மருத்து[illegible]னைக்கு எடுத்துவர தடை விதிக்கப்பட்டதை அடுத்து குடாநாட்டில் புற்றுநோய் சிகிச்சை நிலையம் மீளவும் ஆரம்பிக்கப்படவில்லை. புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் பெரும் சிரமத்துடனும் பணச் செலவுடனும் கொழும்பு சென்றே சிகிச்சை பெற்றுவரவேண்டியுள்ளது.

இதனையடுத்து குடாநாட்டில் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் எதுவித சிரமமுமின்றி தகுந்த சிகிச்சை பெற அமைச்சர் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவை யாழ்ப்பாணத்திலேயே உருவாக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

# இயல்புநிலை இல்லையெனக் காரணம் கூறி மாணவரின் கல்வியை மழுங்கடிக்கக் கூடாது

## கல்வி அதிகாரிகள் கூட்டத்தில் அமைச்சுச் செயலர்

யாழ்ப்பாணம்,மே30

மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு அனைவரும் ஒத்துழைகக வேண்டும். இயல்பு நிலை இல்லை என்பதைக் காரணம் காட்டி மாணவர்களின் கல்வியை மழுங்கடிக்கக் கூடாது. முழுமையான ஆற்றலைப் பிரயோகித்து கல்வியை வளருங்கள்.

- இவ்வாறு நேற்று யாழ்.வலயக் கல்விப் பணிமனையில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கல்வி அதிகாரிகளுக்கான கூட்டத்தில் உரையாற்றிய வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திறமைமிக்க மாணவர்களும் ஆசிரியர்களும் இடம்பெயர்ந்து சென்று விட்டார்கள் என்று கூறிக் கல்வியைப் பாழாக்காமல், இருக்கின்ற மாணவர்களுக்கு உள்ள ஆசிரியர்கள் மூலம் கல்வியைப் புகட்டவேண்டும்.

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் ஆய்வுகூடப் பாவனைக்கு இரசாயனப் பொருள்களை எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றுக்கொள்ள முடியும். இது பற்றிப் படைத்தரப்பினருடன் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் இணக்கம் காணப்பட்டுள்ளது. ஆனால் பாடசாலைகளோ கல்வி அதிகாரிகளோ தமது தேவை பற்றி அறியத் தருவதில்லை.

இலவச பாடநூல்கள் கிடைப்பதற்குத் தாமதமாகும் ட[illegible]த்தில் வலயக் கல்விப்பணிப்[illegible]ளர்களோ அல்லது உதவிக் கல்[illegible]ப்பணிப்பாளர்களோ, அதிபர்களோ தமது திறமையைப் பயன்படுத்தி ஒரு புத்தகத்தையாவது எடுத்துவந்து போட்டோப்பிரதி எடுத்து மாணவர்களுக்கு வழங்கலாம். தமது வீட்டைப் போன்று மாணவர்களின் கல்வியையும் நேசிக்க வேண்டும்.

பாடசாலைகளுக்கு விஜயம் செய்யும் கல்வி அதிகாரிகள் அங்குள்ள சகல வளங்களையும் ஆராய்ந்து தமது பிரயாணப் படியுடன் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். திருகோணமலையில் நடைபெறும் கல்வி தொடர்பான செயலமர்வுகளுக்குச் செல்வோர் கப்பலில் சென்றால் பணம் வழங்க முடியும். விமானத்தில் சென்றால் அதற்குரிய பணத்தை வழங்குவதற்கு அமைச்சில் பணமில்லை.

விரைவில் வெளியிடப்படவுள்ள தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனப் பட்டியலின் பின்பு யாழ். மாவட்டத்தில் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை இருக்காது என்றும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் 5 வலயக்கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப பணிப்பாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், கணக்காளர்கள், சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.(க-10)


### யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளரங்க விளையாட்டுக் கழகம்

மக்கள் வங்கி வடவலய அனுசரணையுடன்
Dr.D.T.நைல்ஸ் ஞாபகார்த்தமாக நடத்துகின்ற
உள்ளரங்க விளையாட்டுப் போட்டி
2001
மேசைப்பந்தாட்ட நிறைவு நிகழ்வும்
பரிசளிப்பு விழாவும்.

***காலம் :*** **இன்று (30.05.2001) பிற்பகல் 2.30 மணி.**
***இடம் :*** **யாழ் மத்திய கல்லூரி.**

(88445) **- விளையாட்டுப் பொறுப்பாசிரியர்.**


### கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
**திரு.சு.கோணேஸ்வரராசா**
அவர்களின் பாசமிகு தந்தையார்
**திரு.சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம்**

அவர்கள் இறைபதம் எய்தியமையையிட்டு அன்னாரின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

யா/யாழ்ற்றன் கல்லூரி,
காரைநகர்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள் ஊழியர்கள்.

(88446)


### "பிளாஸ்ரிக் தொழில்நுட்பம்" கற்றுக் கொள்ளுங்கள்

- ★ பிளாஸ்ரிக்கில் விளம்பரப்பலகை செய்வது எப்படி?
- ★ எழுத்துக்கள் அறுப்பது, முப்பரிமாணமாக்குவது, ஒட்டுவது, ஸ்ரிக்கர் வேலை செய்வது எப்படி?
- ★ பிளாஸ்ரிக்கில் பாடசாலைச் சின்னம் முதல் கீரெக்ஸ் வரை செய்வது எப்படி?
- ★ பிளாஸ்ரிக்கில் அலுவலக, வர்த்தகரீதியான பொருள்கள் செய்வது எப்படி?

**பயிற்சிக்கட்டணம் - 1000.00 ரூபா மட்டும்.**

விவரங்களுக்கு :
**S.S.யசோதரன் ஆட்ஸ்,**
**185, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(88441)


### தொழிலாளி காயம்

தென்மராட்சி,மே30

பருத்தித்துறைக் கடலில் நங்கூரமிட்டுள்ள கப்பலுக்குப் பொருள்கள் ஏற்றுவதற்காக களஞ்சியத்தில் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில் புகையிலைச் சிப்பம் வீழ்ந்து தொழிலாளி காயமடைந்த சம்பவம் கடந்த ஞாயிறு இடம்பெற்றது.

கரவெட்டி இராச கிராமத்தைச் சேர்ந்த கார்த்திகேசு தபேந்திரன் (வயது 21) என்பவர் இடுப்பில் காயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-117)

### மேசைப்பந்தாட்ட நிறைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே30

யாழ்.மத்திய கல்லூரியின் உள்ளரங்க விளையாட்டுக் கழகம் நடத்தும் மேசைப்பந்தாட்ட நிறைவு நிகழ்வும் பரிசளிப்பும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மக்கள் வங்கியின் வடவலய அனுசரணையுடன் டாக்டர் டி.ரி.நைல்ஸின் ஞாபகார்த்தமாக நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்.கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி.அருணகிரிராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(க-7-9)



வட்டுகோட்டை மத்திய கல்லூரியின் பவள விழா அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் இளைப்பாறிய ஆசிரியர் வே[illegible]நாகராசாவுக்கு பொன்னாடை போர்த்துவதைப் படத்தில் காணலாம். (க-175)

# யாழ்.கோட்டை சுரங்கத்தில் சூட்டுக் காயங்களுடன் சடலம்

## நேற்று பொலீஸாரால் மீட்பு

யாழ்ப்பாணம்,மே30

யாழ்நகர் முனியப்பர் கோயிலுக்கு பின்புறமாக உள்ள கோட்டையின் சுரங்கப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் ஆணின் சடலம் ஒன்று நேற்று பொலீஸாரினால் மீட்கப்பட்டது.

பொருமிப்பெருத்து துர்நாற்றம் வீசும் இச்சடலத்தில் நெற்றி,மற்றும் காதுப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன.

உயிரிழந்தவர் 5 அடி 5 அங்குல உயரம் உடையவர். ஊதாநிற நீளக் காற்சட்டையும் அதே நிறத்திலான சேர்ட்டும் அணிந்த நிலையில் மூக்குக் கண்ணாடியுடன் சடலம் காணப்பட்டது.

கொலையுண்டவர் சுமார் 35 வயது மதிக்கத்தக்கவர். வலது கையில் நூல் ஒன்றும் கட்டப்பட்டிருந்தது.

அடையாளம் தெரியாது முகம் சிதைந்த நிலையில் இருக்கும் இச்சடலம் தற்பொழுது யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு, சட்டவைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.வி.சிறிராஜேஸ்வரன் ஆகியோர் பொலீஸார் சகிதம் சடலம் கிடந்த பகுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டனர்.

குப்புறக்கிடந்த இச்சடலத்தின் மீது குண்டைச் செயலிழக்கச் செய்யும் படையினர் பரிசோதனை மேற்கொண்டனர். 4 அல்லது 5 நாள்களுக்கு முன் இந்தக் கொலை நிகழ்ந்திருக்கலாம் என்று வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவம் தொடர்பாக புலன் விசாரணைகளை நடத்தி நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவான பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (க-5-10-86)

### கைவிடப்பட்ட சைக்கிள் யாருடையது?

யாழ்ப்பாணம்,மே30

நல்லூர் பிரதேச செயலக வளவினுள் அநாதரவான நிலையில் ஆண்களுக்கான சைக்கிள் ஒன்று நேற்று முன்தினம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆதாரங்களைச் சமர்ப்பித்து சைக்கிளைப் பெற்றுக்கொள்ளுமாறு உதவிப் பிரதேசசெயலர் சி.வேல்முருகோன்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறிப்பிட்ட தினத்தில் பூட்டப்பட்ட நிலையில் இருந்த ஆண்களுக்கான சைக்கிள் ஒன்று பிரதேச செயலக வளவில் இருந்து காணாமற்போயுள்ளது. தவறுதலாக இதனை எடுத்துச் சென்றவர்கள் மீள அதனை ஒப்படைக்குமாறு அவர் தெரிவித்துள்ளார்.

(க-10)

## மரண அறிவித்தல்கள்

கரம்பொன் கிழக்கு, காளிகோயிலடி

### மாரிமுத்து திருநாவுக்கரசு

(கரம்பொன் கிழக்கு ஸ்ரீகாளிகா புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான பரிபாலன சபை முன்னாள் தலைவர், தற்போதைய பரிபாலன சபைக் காப்பாளர்)

கரம்பொன் கிழக்கு காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் இல.18, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து திருநாவுக்கரசு அவர்கள் நேற்று (29-05-2001) செவ்வாய்க் கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - நாகம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பராசக்தியின் அன்புக் கணவரும் கைலாயநாதன், சிவநாதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் உருத்திராணி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், குமரவேலு, சண்முகம், சுப்பிரமணியம், பூமணி மற்றும் பாக்கியம், பார்வதி (மனோன்மணி) ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், நாகலெட்சுமி ஐயாத்துரை, துரைராசா, கனகராசா மற்றும் மகேஸ்வரி, கமலேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவகாந்தன், சிவரூபன், சிவசங்கர், அபிராமி, சிவதர்சன் ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31-05-2001) வியாழக்கிழமை நண்பகல் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*இல. 18, சிவப்பிரகாசம் வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (C/16933)

தகவல்:
திருமதி
உருத்திராணி கைலாயநாதன்
(மருமகள்)

### சேனாதிராசா இராசையா

மந்துவிலைப் பிறப்பிடமாகவும், கண்ணன் ஆலய வீதி, மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சேனாதிராசா இராசையா 13.05.2001 ஞாயிற்றுக்கிழமை முழங்காவிலில் காலமானார்.

இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தற்காலிக முகவரி:*
*நாவலர் மடம், நவிண்டில்*
*"கரவெட்டி"* (C/16933)

தகவல்:
இ.புஸ்பா, இ.ஜெயந்தி
(மகள்மார்)

முகாமையாளரின் இடமாற்றத்தை ரத்துச் செய்யக் கோரி

# சுன்னாகம், மருதனார்மடம் பகுதி

# வர்த்தகர்கள் டக்ளஸுக்கு மகஜர்

யாழ்ப்பாணம், மே 30

மக்கள் வங்கியின் வடவலய உதவிப் பொதுமுகாமையாளர் க. திருநாவுக்கரசுவின் இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு கோரி சுன்னாகம், மருதனார்மடம் வர்த்தக சங்கங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு மகஜர்களை அனுப்பி வைத்துள்ளன.

சுன்னாகம் வர்த்தகர் சங்கம் அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். குடாநாட்டில் இயங்கிய வங்கிகள் எல்லாமே கடந்த காலங்களில் பணம் சேகரிக்கும் நிலையங்களாகச் செயற்பட்டன. இப்பணங்கள் சிங்களப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அந்த வகையில் மக்கள் வங்கியும் 1964 முதல் 1996 வரையான காலப்பகுதியில் நிதி சேகரிப்பு நிலையமாகவே செயற்பட்டது. இங்கிருந்து தமிழ் மக்களின் பணத்தைச் சுரண்டி தமிழ்மக்கள் வாழும் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களின் அபிவிருத்திப் பணிகளுக்கு அந்தப்பணத்தை அனுப்பி வைத்தன.

1997 ஆம் ஆண்டில் மக்கள் வங்கியின் யாழ். பிரதேச நிர்வாகத்தைப் பொறுப்பேற்ற திருநாவுக்கரசு வங்கிகள் நிதி சேகரிப்பு நிலையங்களாக மட்டும் இயங்கக் கூடாது என்ற கொள்கையில் உறுதியாக இருந்தார்.

1997 ஆம் ஆண்டு பதவியேற்ற திருநாவுக்கரசு கடன் வழங்கல், மேலதிகப்பற்று, உத்தரவாதக் கடிதக் கடன்கள், சுயதொழில் கடன்கள் என்பவற்றை வங்கி வாடிக்கையாளரின் தன்மை கருதி வழங்கி வந்துள்ளார்.

மக்கள் வங்கி சுயதொழில் முயற்சி போன்ற கடனுதவிகளைப் பலருக்கு வழங்கி வருவதால் பலரும் பயன் பெறக்கூடியதாக இருந்தது.

இந்த நிலையில் யாழ். வட வலய உதவிப் பொது முகாமையாளரின் இடமாற்றம் எமக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. இச்செயல் எமது மக்களுக்கு எதிராகத் திட்டமிட்டுச் செய்யப்பட்ட செயலாகவே தெரிகின்றது.

இந்த இடமாற்றம் யாழ். மக்களின் புனர்வாழ்வு அமைச்சராகிய நீங்கள் எடுக்கும்முயற்சிக்கு முட்டுக்கட்டையாக அமைந்து விடுமோ என்று எண்ணத்தோன்றுகின்றது. பொருள்களை எடுத்து வருவதற்கான கப்பல் போக்குவரத்து தங்களால் ஒழுங்கு படுத்தப்படும் இந்தச் சமயத்தில் வர்த்தகர்களுக்கு வங்கி கைகொடுக்காவிட்டால் எல்லாமே அர்த்தமற்றதாகிவிடும் என்பதைக் கவனத்தில் எடுக்க வேண்டும்.

எனவே இந்த, விடயத்தில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு முகாமையாளரின் இடமாற்றத்தை உடனடியாக ரத்துச்செய்யுமாறு கோருகின்றோம்.

— இவ்வாறு அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருதனார்மடம் வர்த்தகர் சங்கம் வழங்கிய மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மக்கள் வங்கியின் யாழ். வலய உதவிப் பொது முகாமையாளர் க. திருநாவுக்கரசு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்பதைக் கேள்விப்பட்ட நாம் மிகுந்த வேதனையும், அதிர்ச்சியும் அடைந்துள்ளோம்.

அவர் முகாமையாளராக வந்த பின்பு மேலதிகக் கடன்கள் உத்தரவாதக் கடிதக் கடன்கள் போன்றவற்றை வழங்கியதன் மூலம் எங்கள் வியாபார நடவடிக்கைகளுக்கு பேருதவியாக இருந்தார்.

இடம் பெயர்வின் பின் எந்தவித மூலதனமும் இல்லாத வர்த்தகர்களுக்கு மக்கள் வங்கி ஒன்றே கடன் வசதிகளை வழங்கி ஊக்கிவித்துள்ளது. முகாமையாளர் திருநாவுக்கரசு அதற்குச் காரணம்.

இவரின் இடமாற்றம் இரத்து செய்யப்படாவிடின் சிறிய வர்த்தகர்களாகிய நாங்கள் மிகவும் பாதிக்கப்படுவோம். பணம் உள்ள பெரிய வணிகர்களே யாழ்ப்பாணத்தில் வர்த்தகத்தில் ஈடுபட முடியும் என்ற நிலை உருவாகும். இதைவிட ஆதனக் கடன்கள் மக்கள் வங்கியால் மட்டுமே வழங்கப்படுகின்றன. மற்றைய வங்கிகளால் எந்தவித உதவிகளும் வழங்கப்படுவது கிடையாது. ஆகவே இவ்விடயத்தில் தாங்கள் உடனடியாக தலையிட்டு இந்த இடமாற்றத்தை இரத்துச் செய்து எங்களுக்கு வரும் அபாயத்தைப் போக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

## பதவி வெற்றிடம்

தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர் (பெண்)

பதவி - தமிழ்

கல்வித் தகைமைகள்: க. பொ. த. சாதாரணதரத்தில் சித்தியடைந்தவராய் இருத்தல் வேண்டும்.

மேலதிக தகைமைகள்: ஆங்கிலத் தட்டெழுத்திலும், லிகிதர் வேலையிலும் அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

அனுபவம்: இரண்டு வருடம் ஏதாவது ஒரு நிறுவனத்தில் கடமையாற்றியவராய் இருத்தல் வேண்டும்.

சம்பளம்: நேரில் பேசித் தீர்க்கப்படும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளுடனும், அண்மையில் பெறப்பட்ட நற்சான்றிதழுடனும் நாளை (31-05-2001) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு கீழ்க்காணும் முகவரிக்குச் சமுகமளிக்கவும்.

நிர்வாகம்

யாழ்/மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்,
317, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/16927)


## அழைப்புக் கட்டளை

இல. 16 பிரிவு 55 (1)

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

**பொன்னுத்துரை அசோகன் பெண் மேகலா,**
மே/பா, கே. குமாரலிங்கம்,
இணுவில் தெற்கு, இணுவில்.

வழ. இல. ம. நீ./ 120 — வழக்காளி —

எதிர்

**பொன்னுத்துரை அசோகன்**
உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

— எதிராளி —

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி உமக்கும் தனக்கும் இடையில் நடைபெற்ற திருமணத்தை நீக்கும் கட்டளையைப் பெறுவதற்கு இந்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். 18-06-2001 அன்று காலை அல்லது அதற்கு முன்னர் நீவிர் நேரிலோ அல்லது சட்டத்தரணி மூலமோ தோன்றி மறுமொழி ஏதேனும் இருப்பின் நீதிமன்றில் கோப்பிடும்படி இத்தால் நீவிர் அறிவிக்கப்படுகிறீர்.

நீர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரர்கள் இல்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப் படுத்தவும்படுகிறீர்.

பதிவுபெற்ற சட்டத்தரணி மூலம் நீர் தோன்றாவிடில் சட்டமுறையான எல்லா அறிவித்தல்கள் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக்கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தவும்படுகிறீர்.

2001 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 25 ஆம் திகதி.
நீதிமன்றக் கட்டளைப்படி,

**செ. விக்னேஸ்வரமூர்த்தி**
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

வரைந்தவர்:
**எஸ். பீ. சிவஞானம்**
வழக்காளியின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி.

(சி-16932)

# பாடசாலை நூலகங்களுக்கு பயனுள்ள கலைப் பிரிவு நூல்கள்

## பேராசிரியர் அன்பளிப்புச் செய்கிறார்

யாழ்ப்பாணம், மே 30

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தமது அறுபதாவது அகவை நிறைவையொட்டி மாணவர்களுக்குஉதவும் புதிய திட்டம் ஒன்றை வகுத்துள்ளார்.

பேராசிரியரும் அவரது துணைவியார் மனோன்மணி சண்முகதாஸும் கலைப்பிரிவு மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படக் கூடிய பல நூல்களை எழுதியுள்ளனர்.

அந்த நூல்களை ஜி. சீ. ஈ. உயர்தர கலைப் பிரிவு வகுப்புகள் உடைய பாடசாலைகளின் நூலகங்களுக்கு அன்பளிப்பாக வழங்கத் தாம் முடிவு செய்திருப்பதாகப் பேராசிரியர் சண்முகதாஸ் உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்நூல்கள் யாவும் பொதி செய்யப்பட்ட நிலையில்யாழ். பல்கலைக்கழக உயர்பட்ட ஆய்வு பீடத்தில் இருப்பதாகவும், அவற்றைப் பெற விரும்பும் பாடசாலைகள் பீடாதிபதி, உயர்பட்ட ஆய்வுபீடம், யாழ். பல்கலைக்கழகம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்படுகின்றது. (அ)

# தமிழர் ஆசிரியர் சங்கக் குழு கல்வி அமைச்சரைச் சந்திக்கும்

யாழ்ப்பாணம், மே 30

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தூதுக் குழு ஒன்று இன்று புதன்கிழமை கல்வி அமைச்சில் கல்வி அமைச்சர் சுனில் பிரேமஜயந்த மற்றும் அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்த உள்ளது.

ஏற்கனவே கல்வி அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் மற்றும் வடக்கு—கிழக்கு மாகாண கல்விச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்ட 30 அம்சக் கோரிக்கைகள் தொடர்பாக இன்றைய பேச்சுக்களின் போது விவாதிக்கப்படும்.

ஆசிரியருக்கான கொடுப்பனவுகள், ஆசிரியர், அதிபர் நியமனங்கள், அதிபர், ஆசிரியர்களுக்கான புதிய சம்பளத் திட்டம், கல்விக் கல்லூரி, ஆசிரிய மத்திய நிலையங்களை அமைத்தல், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆகிய விடயங்கள் குறித்து கல்வி அமைச்சருடன் பேச்சு நடத்தப்படும் என்று சங்க வட்டாரக்கள் தெரிவித்தன.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் சி. தண்டாயுதபாணி தலைமையில் செல்லும் குழுவினரே கல்வி அமைச்சருடன் பேச்சு நடத்துவர் (ஐ)

# பொன்னாலை திருட்டு சம்பவம்; சந்தேக நபருக்கு விளக்கமறியல்

## மேலும் இருவர் தேடப்படுகின்றனர்

வீட்டுக்குள் அத்துமீறிப் பிரவேசித்து 7 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடியதாகக் குற்றம் சாட்டி மல்லாகம் மாவட்ட நீதிபதி முன் ஆஜர் செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிபதி பா. சுப்பிரமணியம் விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

மானிப்பாய் பொலீஸாரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் பொன்னாலையைச் சேர்ந்த பற்குணம் யோகம்மா என்பவரின் வீட்டில் திருடியதாகக் கூறி ஆஜர் செய்யப்பட்ட செல்லையா சுதன் என்ற இளைஞரே விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளவர் ஆவார்.

மேலும் இரண்டு சந்தேக நபர்களைத் தேடி பொலீஸார் வலை விரித்துள்ளனர். (க-86)

# யாழ். பல்கலையில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 30

யாழ். பல்கலைக்கழகஇளம் பொருளியலாளர் மன்றத்தினரின் ஏற்பாட்டில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3. 00 மணிக்கு பொருளியல்துறை மண்டபத்தில் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் ''வங்கிச் சட்டங்களும் வங்கி நடைமுறைகளும்'' என்ற தலைப்பில் சாவகச்சேரி மக்கள் முகாமையாளர் கு. ரகு கருத்துரையாற்றவுள்ளார்.

கருத்தரங்கில் உயர்தர வகுப்பு மாணவர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க-6)

# சமயப் போட்டி இம்முறை இல்லை

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை ஒட்டி ஆலய இந்து இளைஞர் மன்றம் வருடாந்தம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்திவரும் சமய அறிவுப் போட்டி இம்முறை நடைபெறமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-27)


## யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
## யாழ். வர்த்தகர்களுக்கான
## அன்பான வேண்டுகோள்

மக்கள் வங்கி வடவலய உதவிப் பொது முகாமையாளர் திரு. க. திருநாவுக்கரசு அவர்களின் திடீர் இடமாற்றத்தை ரத்துச்செய்யும்படி கோரி மேதகு அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தாவிடம் மகஜர் ஒன்றைக் கையளிப்பதற்காக இன்று (30-5-2001) புதன்கிழமை காலை 9-00 மணிக்குச் சத்திரச்சந்தி ஞானவைரவர் கோயிலடியில் இருந்து ஆரம்பமாகும் ஊர்வலத்தில் வர்த்தகர்கள் அனைவரும் தமது ஸ்தாபனங்களை முற்பகல் 11-00 மணி வரை பூட்டி, அனைத்து உரிமையாளர்களையும் ஊழியர்களையும் பங்குகொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

• யாழ். வணிகர் கழகம்.

165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(88444)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலை
தாதிய உத்தியோகத்தர்
**திருமதி தனேஸ்வரி மனோகரனின்**
அன்புத் தந்தையார்

### தம்பிப்பிள்ளை இராசையா

28-05-2001 காலமானதையிட்டு அன்னாரின் பிரிவுத் துயரில் நாமும் பங்கு கொண்டு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். அரசினர் வைத்தியசாலை
தாதிய உத்தியோகத்தர்
(88426) நலன்புரிச் சங்கம்.

## முதலாண்டு நினைவஞ்சலி



மலர்வு 14 – 06 – 1980

உதிர்வு 09 – 06 – 2000

### சோமசுந்தரக் குருக்கள் கோபாலகுமாரசர்மா

(மட்டுவில்)

திதி: 30-05-2001

பாசத்தின் சுமையோடு கணப்பொழுதில் மறைந்த எங்கள் அன்புப் பெறாமகனே! வருடம் ஒன்று மறைந்தாலும் உன்னை மறக்க முடியவில்லையே! ஆத்மா சாந்தி அடைவதாக!

- சித்தப்பா குடும்பத்தினர்.

பா. நகுலேஸ்வர ஐயர்,
74, பிறவுண் வீதி,
நீராவி பிட்டி, யாழ்ப்பாணம். (88133)

## நெஞ்சைவிட்டு நீங்காத ஓராண்டு நினைவலைகள்



### அமரர் நாகலிங்கம் சிவசோதி

S.L.P.S-I

(அதிபர், யா. சந்திர மௌலீச வித்தியாலயம்)

மண்ணில் 03-12-1946

விண்ணில் 09-06-2000

அப்பா நீங்கள் இருப்பதென்பது பிரமை;
இல்லை என்பதே உண்மை!
அடிசிற்கினியாளை அன்புடைய அம்மாவை
நொடிப் பொழுதில் பிரிந்ததேன் அப்பா?
அப்பா, தந்தை மகற்காற்றும் உதவியாய்
எம்மை முந்தியிருக்கச் செய்தீர்கள்!
நாம் முந்தியிருக்க முனைகையிலே
உங்கள் இமைகள் மூடிக்கொண்டதேனோ?
உங்கள் நினைவுகள் அழியாதவை;
உங்கள் கனவுகள் கலையாதவை! அவை
நனவாக நாம் உழைப்போம்!

**மனைவி, மக்கள், சகோதரர்கள், உறவினர்கள்.**

தற்காலிக முகவரி:
916, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

நிரந்தர முகவரி:
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(88383)

## கிணற்றில் வீழ்ந்து சிறுமி மரணம்

சண்டிலிப்பாய், மே 30

தண்ணீர் அள்ளி வருவதற்காகச் சென்ற ஒன்பது வயதுச் சிறுமி கிணற்றில் தவறி வீழ்ந்து மரணமான சம்பவம் அண்மையில் மாதகலில் இடம்பெற்றது.

மாதகல், காஞ்சிபுரம், என்ற இடத்தைச் சேர்ந்த கந்தசாமி சிவரஞ்சினி என்பவரே இவ்வாறு கிணற்றுக்குப் பலியானவராவார். (ம-135)

## ஆலயச் சூழலில் துப்புரவுப்பணி

வலி. மேற்கு, மே 30

மூளாய் முருகன் கோயில் சுற்றாடல் சிரமதானத்தின் மூலம் அண்மையில் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வலிகாமம் மேற்குத் தையல் பயிற்சி நிலைய மாணவிகள் இச் சிரமதானப் பணியை மேற்கொண்டனர். கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தா. தியாகமூர்த்தி தலைமையில் இச் சிரமதானம் இடம் பெற்றது.

## 'பெடாஸ் - 2001' விளையாட்டு விழா

யாழ். பல்கலைக்கழக உடற்கல்வித் துறையின் 'பெடாஸ் - 2001' (Pedas) விளையாட்டு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பல்கலைக்கழக விளையாட்டுத் திடலில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வர்த்தக முகாமைகள் கற்கைகள் பீடாதிபதி எம். நடராஜசுந்தரமும் சிறப்பு விருந்தினராக உடற் கல்வித்துறை இணைப்பாளர் திருமதி ரி. சிவாஸ்கரனும் கலந்து கொள்வர். (ம-185)

## சிரமதானம்

வடமராட்சி, மே 30

சுகாதார வாரத்தை ஒட்டி கரணவாய் அந்திரான் பொதுச் சந்தை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

கரணவாய்ப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பொ. பாலதேவனின் மேற்பார்வையில் இடம்பெற்ற இச் சிரமதானப் பணியில் கரவெட்டிப் பிரதேச சபைத் தொழிலாளர்கள் ஈடுபட்டனர். (ஐ-173)

## பணிப்பாளர் வருகை

யாழ்ப்பாணம், மே 30

மெதடிஸ்த அங்கிலிக்கன், தென்னிந்திய திருச்சபைகளின் சிறுவர் இல்லப் பணிப்பாளர் அருட்திரு பொன். ஆனந்தராஜா யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஒருவார காலம் தங்கியிருக்கும் இவர் யாழ்ப்பாணம் உடுவில், பருத்தித்துறை, வட்டுக்கோட்டை, மானிப்பாய், கட்டைவேலி ஆகிய இடங்களில் உள்ள குறிப்பிட்ட சபைகளின் சிறுவர் இல்லங்களைப் பார்வையிட்டு அவற்றின் குறைகளையும் தேவைகளையும் அறிந்து கொள்வார். (ஐ 173)

## சமாசச் அங்குரார்ப்பணம்

வடமராட்சி கிழக்கு, மே 30

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச மட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் உதவி அரசாங்க அதிபர் வி.ப. வேலாயுதபிள்ளை தலைமையில் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அங்குரார்ப்பண வைபவத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எல்.எச்.ஜே. ஜீவரட்ணமும் கலந்து கொண்டார்.

சமாசத்தின் தலைவராக வே. அம்பலவாணேசன் தெரிவு செய்யப்பட்டார். (ஐ-182)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக அலுவலர் திரு. த. விஜயபாலசிங்கம்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி தம்பிராசா பாக்கியம்

அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்டச் செயலக
அலுவலர்களும்
நலன்புரிக் கழக உறுப்பினர்களும்.

மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம். (சி/16928)

## சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

பதிவு இல. ஜே/1594 – 11-03-1972

[வரையுள்ளது]

### முக்கிய அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் அனைத்துக் கிளைகளுக்குமான, கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளை பொதுச் சபைக் கூட்டங்கள் விரைவில் நடைபெற உள்ளன. இது தொடர்பாக உறுப்பினர் இடாப்பு கிளை வாரியாகத் தயாரிக்கப்பட்ட, வாக்களிக்கத் தகைமை பெற்ற உறுப்பினர் அட்டவணைகளை எமது சங்கம் தற்போது இயங்கி வரும் பிரதான வீதி, அச்சுவேலி என்னும் முகவரியில் பார்வைக்கு வைத்துள்ளது. இந்த அட்டவணை தொடர்பாக மேன்முறையீடுகள், ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் உறுப்பினர்கள் அவற்றை இன்றில் இருந்து ஏழு நாள்களுக்குள் மேற்படி முகவரியில் இயங்கும் சங்கத்தலைமை அலுவலகத்தில் எழுத்து மூலம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சட்டத்தின் படி முழுத்தகைமை பெற்ற உறுப்பினர்கள் மட்டுமே கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்கு சமூகமளித்து வாக்களிக்கும் உரிமை பெற்றவர்களாவர். முழுத்தகைமை பெற்ற உறுப்பினர் என்பது, உறுப்பினர்களாகச் சேர்ந்த திகதியில் இருந்து ஓராண்டு காலத்தைக் கடந்தவரும், ஒரு பங்கின் முழுப் பெறுமதியான நூறு ரூபாவைச் செலுத்தி முடித்தவருமான ஓர் உறுப்பினரைக் குறிக்கும்.

கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் நடைபெறும் திகதி, இடம் மற்றும் நிகழ்ச்சி நிரல் என்பன தொடர்பான அறிவித்தல் பத்திரிகை வாயிலாகப் பின்னர் விளம்பரப்படுத்தப்படும்.

செயலாளர்
சாவகச்சேரி பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

சங்கத் தலைமை அலுவலகம்,
அச்சுவேலி. (88376)

## மரண அறிவித்தல்கள்

### சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம்

கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் மருதடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் நேற்று (29-05-2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற சோதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவசக்திராசா மற்றும் கோணேஸ்வரராசா (ஆசிரியர் யா. யாழ்ரன் கல்லூரி, காரைநகர்) செல்வராணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சாந்தி, பஞ்சலிங்கம் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் சோபிதனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30-5-2001) புதன்கிழமை காலை 9.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. கோணேஸ்வரராசா
(மகன்)

மருதடி,
காரைநகர். (85417)

### சுப்பிரமணியம் சதீஸ்குமார் (சதீஸ்)

கரணவாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் சுவிற்சர்லாந்தினை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சதீஸ்குமார் (சதீஸ்) 13-05-2001 அன்று அகால மரணமானார்.

இவர் சுப்பிரமணியம் - சித்திரா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், சதீஸ்வரி, சதீஸ்கலா, சதீஸ்வரன் (பேராதெனிய பல்கலைக்கழக மாணவன்), சதீஸ்குமாரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தங்கராசா, ஈஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும், சவிதாவின் ஆசை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30-05-2001) புதன்கிழமை சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:-
குடும்பத்தினர்.

வல்லியாவத்தை,
கரணவாய் மேற்கு. (88423)

உதயன்

## பச்சைப் பேரினவாதம்!

விடுதலைப் புலிகள் மீதான தடையை அரசாங்கம் ஒருபோதும் நீக்கமாட்டாது.

நோர்வேத் தரப்பினால் பிரச்சினையைத் தீர்க்க முடியாவிட்டால், அவர்கள் சுய கௌரவத்துடன் விலகிக் கொள்ளலாம்.

நோர்வே தரப்பினர் இந்தப் பிரச்சினையை அமெரிக்காவிடம் எடுத்துச் சென்று சர்வதேசப் பிரச்சினையாக்க முயற்சிக்கின்றனர்.

இலங்கைப் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க உதிர்த்த வசனங்கள் இவை.

சுமார் நாற்பது பௌத்த சங்கங்கள் அங்கம் வகிக்கும் பௌத்த சம்மேளனத்தின் அவசரக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் அங்கு முன்வைக்கப்பட்ட கருத்துக்களையும் அடியொற்றி எழுந்தவையாக - ஒரே வகையினதாகவே - பிரதமரின் வாசகங்கள் அமைந்துள்ளன.

பௌத்த சம்மேளனம் நிறைவேற்றிய தீர்மானங்கள் பௌத்த பேரினவாதமும் தமிழர்களுக்கு எதிரான இன விரோதமும் இன்னும் பௌத்த தீவிரவாதிகளிடம் இருந்து இம்மியளவும் தணியவில்லை என்பதனை மிக வெளிச்சமாக எடுத்துக் காட்டுகின்றன.

1956ஆம் ஆண்டில் தனிச் சிங்கள‌ச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது இருந்ததைவிட பௌத்த பேரினவாதம் இப்போது பல மடங்கு உக்கிரமடைந்திருக்கின்றது என்பதனையே அந்தத் தீர்மானங்கள் எடுத்தியம்புகின்றன.

தமிழர்கள் இந்த நாட்டில் சிறுபான்மையினர். அவர்களுடன் பேச வேண்டிய தேவையில்லை. அவ்வாறு பேசினால் அவர்களுக்குச் சமஅந்தஸ்து வழங்கியதாகிவிடும் என்பதும் தீர்மானத்தில் அடங்கும்.

தமிழர்கள் சிறுபான்மையினராக இருப்பதால் அவர்களுக்கு உரிமைகள் எதனையும் வழங்கமுடியாது- அவ்வாறு எதனையும் அனுபவிக்க அவர்கள் தகுதியற்றவர்கள். சிங்கள மக்கள் விரும்பி வழங்கும் சலுகைகளை ஏற்றுக்கொண்டு வாழ வேண்டியவர்கள் - என்ற பச்சைப் பேரினவாதம் - அதன் மூலக்கோட்பாடு - சிறிதளவேனும் மாற்றப்படவில்லை என்பதனையும் பௌத்த சம்மேளனத்தின் தீர்மானங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

கொழும்பிலுள்ள நோர்வே நாட்டின் தூதுவரை நாடு கடத்த வேண்டும் என்று சிங்கள மகா சபை கேட்பதும் -

நோர்வேயினால் பிரச்சினையைத் தீர்க்கமுடியாவிடில் அவர்கள் சுய கௌரவத்துடன் விலகிக்கொள்ளலாம் என்று பிரதமர் கூறுவதும் - ஒரே அலைவரிசையில் சங்கமிப்பதை அவதானிக்கலாம்.

இத்தகைய ஒரு பிரதமரை உள்ளடக்கிய அரசுக்கு, சமாதானத்துக்காக அர்ப்பணிப்புடன் உழைப்பதாகக் கூறும் சந்திரிகாவுக்கு தமிழர்களின் நியாயமான - நீதியான - உரிமைகளை வழங்கும், அவர்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் தீர்வு ஒன்றைக் கொண்டு வரும் சக்தி - துணிவு - எங்கிருந்து வரப்போகிறது?

கடந்த வருடம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பேரினவாதிகளின் ஆதரவைப்பெறும் பிரதான நோக்கத்துடனேயே ரத்னசிறிக்குப் பிரதமர் பதவியை வழங்கினார் சந்திரிகா.

அவரை விஞ்சி சமாதானப் பேச்சுக்களும் தீர்வுகளும் நடத்தும் தலைமைத்துவம் ஜனாதிபதியிடம் உண்டா?

ஜனாதிபதி - அரசு - கேட்டுத்தான் நோர்வே அனுசரணையாளராகப் பணி செய்ய முன்வந்தது. அதன் உதவி தேவையில்லை என்று இப்போது விட்டெறிந்து பேசுவது, இன விவகாரம் சர்வதேசப் பிரச்சினையாக மாறப்போகிறது என்ற அச்சத்தினாலேயே ஆகும்.

நோர்வே தனது பணியில் இருந்து விலகினாலும் இலங்கையின் இன விவகாரம் சர்வதேசமயப்படுவதை தடுக்க முடியாது என்பதனைப் பிரதமர் உணராதது சிரிப்புக்கிடமானதே!

# தென்மராட்சி அரிசி கோப்பாயில் விற்பனை

## மலிவு விலையில் பெற மக்கள் முண்டியடிப்பு

யாழ்ப்பாணம்,மே30

கோப்பாய்ச் சந்தியில் அரிசி வியாபாரம் களைகட்டியுள்ளது. அங்கு குத்தரிசி கிலோ எட்டு ரூபா முதல் 10ரூபாவரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தென்மராட்சிப் பகுதிக்குச் சென்று வீடுகளைப் பார்வையிட்டுத் திரும்புவோர் அங்கிருந்து எடுத்துவரும் அரிசியே கடந்த சில நாள்களாகக் கோப்பாய்ப் பகுதியில் மலிவு விலையில் விற்பனையாகி வருகிறது.

கோப்பாய்ச் சந்தியிலுள்ள பழைய விற்பனைத் திணைக்களத்துக்கு முன்பாக வைத்து அரிசி விற்கப்படுகிறது. நாள்ச் சந்தை போல இயங்கும் இவ்விடதத்துக்கு யாழ்.நகரில் இருந்து வியாபாரிகள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் சென்று அரிசி வாங்கி வருவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

(ஐ-175-72)

## புலிகளின் தாக்குதல் குறித்து தெற்கில் அச்சநிலை

கொழும்பு,மே30

தென்னிலங்கையில் விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதலை நடத்தலாம் என்று புலனாய்வுத் தகவல்கள் கிடைத்ததை அடுத்து கடந்த வெள்ளியன்று அமைச்சர்கள் பலரும் தங்களது உத்தியோகபூர்வ நிகழ்சிகளை ரத்துச் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்பகுதியில் சில பாடசாலைகளில் நடைபெறவிருந்த பரிசளிப்பு வைபவங்களும் அடிக்கல் நடும் நிகழ்வுகள் உட்பட பல வைபவங்களும் ரத்துச் செய்யப்பட்டன.

ஆனால் எதிர்பார்க்கப்பட்டது போல் அன்றைய தினம் பெரிய தாக்குதல் எதுவும் இடம்பெறவில்லை.

# நாட்டு நடப்பு

"ஆளுக்கு மேல் ஆள் விழுந்து பொங்கை
அடிபடுது சனமேனடி இங்கை
நாளுக்கு கடை கிடை யேதும்
நல்ல படி திறக்கினமோ பாரன்!"
"கூப்பன் கடையனை பாட்டி"
"கூட்ட மேனடி மேனை?"
"மாப் பக்கற் விலை மலிவாக
மாதத்திற் கொன்று தருகினமாம் வேண்டன்!"
- *விகடகவி மு.திரு.*

# புலிகளுடன் பேசும் முயற்சியை அரசு ஒருபோதும் கைவிடாது

## அமைச்சர் டி.எம்.ஜெயரத்ன தெரிவிப்பு

கொழும்பு,மே30

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தும் முயற்சியை அரசு கைவிடாது.

விவசாய அபிவிருத்தி அமைச்சரும் பொ.ஐ.முவின் பொதுச் செயலருமான டி.எம்.ஜெயரத்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள தேக்க நிலை குறித்து கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நோர்வே நாட்டு விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் மேற்கொண்டுள்ள சமாதான முயற்சியில் தற்போது ஏற்பட்டுள்ள தேக்க நிலையை நீக்குவதற்கான முயற்சிகள் தொடர்ந்து இடம்பெறும்.

யுத்தநிறுத்தம், தம்மீதான தடையை அகற்றுதல் போன்ற கோரிக்கைகளை புலிகள் முன்வைத்துள்ளனர். ஆனால் யுத்தம் நிறுத்தப்பட்டால் புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பகுதிகளை மீண்டும் அவர்களிடம் இழக்கும் நிலை ஏற்படலாம் என்று படையினர் கருதுகின்றனர். புலிகள் மீதான தடையை நீக்குவது உண்மையான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க உதவுமா என்று மக்கள் அஞ்சுகின்றனர். இதனாலேயே தற்போதைய தேக்க நிலை ஏற்பட்டுள்ளது. எத்தகைய தேக்க நிலைகள் ஏற்பட்டாலும் அரசு சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான தனது நடவடிக்கைகளைக் கைவிடாது தொடரும்.

- இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

(ம)

# திருமலை கடற் தளம் மீது விடுதலைப் புலிகள் 'கண்'!

## புலனாய்வுத் தகவல்கள் எச்சரிக்கை

கொழும்பு,மே30

கடற்படையின் கிழக்குப் பிராந்தியத் தலைமையகம் அமைந்துள்ள திருமலை டொக்யாட் தளம் மீது விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல் நடத்தக்கூடும் என்று புலனாய்வுப் பிரிவின் உயர் வட்டாரங்கள் எச்சரிக்கை விடுத்திருக்கின்றன.

திருமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் இந்தத் தாக்குதலுக்கான பயிற்சிகளில் புலி உறுப்பினர்கள் ஈடுபட்டு வருவதாகவும் புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சாலையில் உள்ள விடுதலைப் புலிகளின் தளத்துக்கும் திருமலையில் உள்ள புலிகளின் தளம் ஒன்றுக்கும் இடையிலான வானொலித் தொடர்பை ஊடறுத்துக் கேட்ட போது கடற்படைத் தளம் மீதான தாக்குதல் பற்றிய இரகசியத் தகவல் தெரியவந்ததாகவும் கூறப்படுகிறது.

(ஐ)

# விமானப்படை அதிகாரிக்கான வாகன இறக்குமதியில் ஊழல்

## ஆணைக்குழு விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு,மே30

இலங்கை விமானப் படையின் உயர் அதிகாரி ஒருவருக்கு சொகுசு வாகனம் ஒன்றை இறக்குமதி செய்வதில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசேட அதிகாரிகளைக் கொண்ட குழு இந்த விசாரணைகளை நடத்துகிறது.

திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்டதை விட அதிகமான விலைக்கு இந்த வாகனம் கொள்வனவு செய்யப்பட்டதா என்பது குறித்தே விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

# அராலி ஊரத்தி கிராமத்துக்கு குழாய் நீர் விநியோகத் திட்டம்

வலி.மேற்கு,மே30

அராலி ஊரத்திக் கிராமத்துக்கு குடி தண்ணீர்க் குழாய்த்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

அராலி ஊரத்திக் கிராம மக்களுக்கு குடி தண்ணீர்க் குழாய்த்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதிக் கிராம அலுவலர் ஆர். ஸ்ரீரஞ்சன் வலிகாமம் மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புகுழுக் கூட்டத்தில் வற்புறுத்தினார். இதனைத் தொடர்ந்து வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் இத்திட்டத்தை தமது பிரதேச சபை மூலம் நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்தார்.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த புதன்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் கே.தர்மராசா தலைமையில் நடைபெற்றது.

(ஐ-175)

## விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்,மே30

பல்வேறு சந்தர்ப்பங்களில் யாழ். குடாநாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 24 கைதிகளையும் அடுத்த மாதம் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ.நீதிமன்ற பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு உத்தரவிட்டுள்ளார்.

நேற்று யாழ்.நீதிமன்றத்தில் இந்த 24 கைதிகளும் ஆஜர் செய்யப்பட்டனர். சட்டமா அதிபரின் அறிக்கை கிடைக்கும் வரை இவர்களைத் தடுப்புக் காவலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் எதிர்வரும் 12ஆம் திகதி இவர்களை நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறும் உத்தரவிட்டார். (ம-5)

## அனுமதி பெறுமாறு அறிவுறுத்து

நெல்லியடி,மே30

அச்சுவேலிப் பொலீஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில், பொது வைபவங்களுக்கு ஒலிபெருக்கியை பயன்படுத்துவோர், அதற்கான பொலீஸ் அனுமதியை ஒரு வார காலத்துக்கு முன் பெற்றுக்கொள்ள வேண்டும் என அச்சுவேலி பொலீஸ் இன்ஸ்பெக்டர் பி.தென்னக்கோன் தெரிவித்துள்ளரர்.

அனுமதி பெறுவதற்காக பொலீஸ் நிலையத்துக்கு கொண்டு வரும் விண்ணப்பங்களுடன் அப்பகுதி கிராம அலுவலர், பிரதேச செயலர் ஆகியோரின் சிபாரிசும், ஒலிபெருக்கி உரிமையாளரின் ஒப்புதல் கடிதமும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ம-109)

# குறை நிவர்த்திச் சேவையின் போது கைதான யுவதி பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,மே30

யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற மக்கள் குறை நிவர்த்தி சேவையில் மனுக்கொடுக்கச் சென்ற போது கைது செய்யப்பட்ட குருநகர் யுவதி நேற்று யாழ்.நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குருநகர் 3ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த வின்ஸிலஸ் ஜீன் றெஜினா என்ற இந்த் யுவதி பொலீஸாரினால் நேற்று யாழ்.நீதிமன்றில் பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

இவரை 5 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமைகளில் யாழ்.பொலீஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

(ம-5)

## நாளை

வைகாசி 17
வியாழக்கிழமை
திதி: நவமி
பிற்பகல் 2.31 வரை
நட்சத்திரம்: உத்தரம்
பின்னிரவு 12.34 வரை
கரி நாள்
சுபநேரம் : 7.22 - 8.52
ராகுகாலம் : 1.22 - 2.52
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

தவறித் தவறுவது தவறல்ல; தவறைத் தவறல்ல என்பதே தவறு.


## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



# மீளக்குடியமர்ந்தோருக்கு குடி தண்ணீர் வசதி இல்லை

அரியாலை, மே30

கொழும்புத்துறை மேற்கில் மீளக குடியமர்ந்த மக்கள் குடிதண்ணீர் வசதியின்றி பெருஞ் சிரமப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

விபுலானந்தா வீதி, வில்வந்தெரு வீதி, கந்தர்மணியம் வீதி, புங்கன் குளம் வீதி போன்ற இடங்களில் மீளக் குடியமர்ந்த மக்கள் குடி தண்ணீரைப் பெறுவதற்குத் தூர இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

இந்தப் பகுதியில் மக்களுக்கு குழாய் நீர் விநியோகம் ஆரம்பிக்கப் படவில்லை. (ஐ-17)

## என்னுடன் தொடர்பு கொள்ளவும்

என்முகதாவில் நிறைவேற்றப்பட்ட உறுதிகளை இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள் உடனடியாக என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

*வடமராட்சியில்:* **மோகன் கட்டடம்**
**பிரதான வீதி, நெல்லியடி.**
(வியாழன், சனிக்கிழமைகளில்)

*வலிகாமத்தில்:* **கோகுல வீதி,**
(பஸ் டிப்போ முன்பாக)
**கோண்டாவில்.**

த.வேலாயுதம்
சட்டத்தரணி (சாவகச்சேரி)

(88409)

உ

## கச்சாய் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த விசாகப் பொங்கல்விழா விஞ்ஞாபனம்

*அம்பாள் அடியார்களே!*

நிகழும் விஷு வருடம் வைகாசி மாதம் 21 ஆம் நாள் (04-06-2001) திங்கட்கிழமை அம்பாளுக்கு வருடாந்த விசாகப பொங்கல்விழா வழமை போல் நடைபெறும்.

பகல் காவடி, பாற்செம்பு நிகழ்வுகளும் இரவு பொங்கல் நிகழ்வும் காலை உதயத்திற் பூசை ஆராதனை ளுடன் பொங்கல் நிகழ்வுகள் யாவும் நிறைவெய்தும் என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

(88387) ***- ஆலய பரிபாலனசபையினர்.***

## UDUVIL GIRLS' COLLEGE
## WANTED

***A Co-ordinator*** - for a Gender Resource Centre.

***Educational Requirements*** - Should be a graduate. Or with womens' Studies and familiar with gender issues.

Should have the ability to convene and arrange seminars/ workshops and Organize womens' issues - related Competitions and exhibitions.

***Salary*** - According to qualifications and experience. but not less than Rs. 6000/-.

***Apply to -***

**The Principal, Uduvil Girls' College,**
**Uduvil, Chunnakam.**

(C/16921)

***Last date for receiving applications - 5th June, 2001.***

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 22 - 04 - 1933

உதிர்வு 09 - 06 - 2000

### அமரர் ஆறுமுகம் யோகலிங்கம்

திதி: 30-05-2001

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவு எம்மை விட்டு மறையாது!
எமது குடும்ப விளக்கே! எங்களைத் தவிக்க
விட்டு எங்கே பப்பா போனீர்கள்?
உங்கள் நினைவோடு வாடுகின்றோம்.
எப்போ பப்பா வருவீர்கள்?

உங்கள் ஆத்மா சாந்தியடைய வேம்படி முருகனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மகள் (நளாயினி)

நிரந்தர முகவரி:-
*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.*

தற்காலிக முகவரி:-
*14, புது வீதி,*
*கொய்யாத்தோட்டம்.*

(88401)

## அ.அட்டைகளைப் பெறக்கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே30

சாவகச்சேரி இந்துக்கல்லூரி மூலம் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களில் ஒரு தொகுதியினரின் அடையாள அட்டைகள் பாடசாலைக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன.

நெல்லியடி மத்திய கல்லூரியிலும இணுவில் மத்தியகல்லூரியிலும் உரியவர்கள் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அதிபர் ஆர். கைலைநாதன் தெரிவித்துள்ளார்.(ம)

## குடிசன மதிப்பீடு பயிற்சி வகுப்பு

குடிசன மதிப்பீடு சம்பந்தமான பயிற்சி வகுப்பு நாளை வியாழக்கிழமை யாழ். செயலகத்தில் புள்ளி விவரத் திணைககளத்தினால் நடத்தப்படவுள்ளது.

இப் பயிற்சி வகுப்புக்களில் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் கடமையாற்றவுள்ள பிரதித் தொகை மதிப்பு அலுவலர்கள், உதவித் தொகை மதிப்பு ஆணையாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-86)

## மேசைப் பந்தாட்ட இறுதி ஆட்டம்

யாழ்ப்பாணம்,மே30

யாழ்.வை.எம்.சி.ஏயினால் நடத்தப்பட்டுவருகின்ற உள்ளரங்க விளையாட்டுப் போட்டிகளில் மேசைப் பந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டமும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (ம-10)

## நடமாடும் சேவை ஒத்திவைப்பு

கோண்டாவில்,மே30

நல்லூர் பிரதேச செயலகத்தினால் நாளை வியாழக்கிழமை கோண்டாவிலில் நடத்தப்படவிருந்த நடமாடும் செயலக சேவை அடுத்த வாரத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

உயர் அதிகாரிகள் குடிசன மதிபபீடு சம்பந்தமான வகுப்புகளில் கலந்து கொள்ள உள்ளதால் இந்த நடமாடும சேவை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத தெரியவந்தது. (ஐ-86)

## ஆலயச் சுற்றாடலில் துப்புரவுப் பணி

அரியாலை,மே30

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயச் சுற்றாடல் பகுதியை யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினர் துப்புரவு செய்து வருகின்றனர்.

ஆலய வீதியில் வளர்ந்திருக்கும் புல் பூண்டுகள் வெட்டித் துப்புரவு செயயப்படுவதோடு குப்பை கூளங்களும் அகற்றப்பட்டு வருகின்றன. (ஐ-17)

## ஜெயலலிதாவை ரணில் சந்திப்பார்

கொழும்பு,மே30

எதிர்வரும் வெள்ளிக்கிழமை புதுடில்லி சென்று இந்தியப் பிரதமர் அடல பிஹாரி வாஜ்பாய் உட்பட முக்கிய தலைவர்களைச் சந்தித்துப் பேசவிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில விக்கிரமசிங்க, சென்னையூடாக நாடு திரும்பும் வழியில், தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவையும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதியையும் சந்தித்துக் கலந்துரையாடுவார். (ஐ)

## படையினர் ஷெல் வீச்சு

அரியாலை,மே30

பாஷையூர், கொழும்புத்துறை பகுதி இராணுவ முகாம்களில் இருந்து இராணுவத்தினர் பூநகரி, கல்முனைப் பகுதிகளை நோக்கி கடந்த சில தினங்களாக ஷெல் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்படுகின்றன.

இதனால் மக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டு வருகிறது. (ஐ-17)

## 'பங்கர்' இடிந்து சிப்பாய் மரணம்

அநுராதபுரம் பதவியா இராணுவ முன்னரங்குப் பகுதியில் காவல் கடமைகளில் ஈடுபட்டிருந்த இராணுவ சிப்பாய் ஒருவர் கடந்த சனிக்கிழமை இரவு 'பங்கர்' இடிந்து வீழ்ந்ததினால் மரணமடைந்துள்ளார்.

பதவியா கபிலவெல இராணுவ முன்னரங்கப் பகுதியில் காவல் கடமைகளில் ஈடுபட்டிருந்த சேனாதீர (வயது30) என்பவரே மரணமடைந்தவராவார்.

இரவுக் கடமைக்குச் சென்றவர் முகாமிற்குத் திரும்பாததால் இவரைத் தேடிச்சென்ற போது பங்கரினுள் சடலமாக மீட்டெடுக்கப்பட்டுள்ளார். (ஐ)

## நன்றியுடன் பாராட்டுகின்றோம்



வடக்கு அபிவிருத்தி,
புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும்
வடக்கு - கிழக்கு
தமிழ் விவகார அமைச்சர்
மாண்புமிகு கௌரவ
**கே.என். டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுடன் குருநகர்ப் பகுதியிலுள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஒன்றாக இணைந்து நடத்திய கலந்துரையாடலில் குருநகரில் அமைந்துள்ள தேவாலயங்களினதும் பாடசாலைகளினதும் கட்டடப் புனரமைப்புக்கும், அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்தமைக்காகவும், விளையாட்டு மைதானத்தை மேலும் விரிவாக்க நடவடிக்கை எடுத்துள்ளமைக்காகவும் அவர்களைப் பாராட்டி நன்றி கூறுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

குருநகரிலுள்ள பொது அமைப்புக்கள்
சார்பாக குருநகர் முன்னேற்ற
ஐக்கிய முன்னணி.

(88392)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 20 - 04 - 1954

விண்ணில் 30 - 05 - 2000

### அமரர் இராசதுரை கமலநாதன் (ராசா)

(சாவகச்சேரி சகானா புத்தக நிலைய, மருந்தக உரிமையாளர்)

**என்றென்றும் எம் நினைவில் நிறைந்திருக்கும்**
**எம் குல விளக்கே! பாசத்தின் திருவுருவே!**
**நேசத்தோடு எம்மைக் காத்த தெய்வமே!**
**அன்போடு வாழ்ந்திருந்து எமக்கெல்லாம்**
**ஆறுதலைத் தந்தவரே! அன்பானவரே**
**நீர் ஒளியோடு ஒன்றித்த ஓராண்டு.**

*இத்தினத்தில் என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய எம் பாசமலர் தூவி பிரார்த்திக்கும்:*

**மனைவி, மக்கள், சகோதரர்கள், மைத்துன மைத்துனிகள்.**

தகவல்:-
*R.ஈசன்* (சகோதரன்),
*வவுனியா.*

(C/16922)

## 30ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 26 - 11 - 1926

மறைவு 01 - 05 - 2001

### திருமதி ஆறுமுகம் இராசம்மா

உற்றாரை உறவைப் பேணி - எங்கள்
சொத்தாக இருந்தாய் நித்திலத்தில்
வித்தாகப் போன பின்பும் எம் மனதில்
விருட்சமாக வாழ்வாய் வேரூன்றி.

உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல நாவலடிப் பிள்ளையாரை வேண்டி நிற்கின்றோம.

நாளை (31-05-2001) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன அழைக்கின்றோம்.

★ இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**- குடும்பத்தினர்.**

நிரந்தர முகவரி:
*கோவில் குடியிருப்பு,*
*சாவகச்சேரி.*

தற்காலிக முகவரி:
*பூமா இல்லம்,*
*முடக்காடு, கரவெட்டி.*

(88385)

# தேங்காயில் ஏற்படும் 'மைற்' நோயை கட்டுப்படுத்தும் முறைகள்

**கடந்த 16 ஆம் திகதிய 'கமமும் புலமும்' பகுதியில் பிரசுரமான தெங்கு வளத்தைக் காக்க விழித்தெழுவோம் பகுதியின் மிகுதிப் பகுதி இன்று பிரசுரமாகியுள்ளது.**

**தேங்காய்களில் புற்றுநோயா? என்ற தலைப்பில் இக் கட்டுரையின் முதல் பகுதி வெளியாகியிருந்தது. இதனால் பலரும் புற்றுநோய் உள்ள தேங்காய்களைச் சாப்பிட்டால் தமக்கும் புற்றுநோய் வருமா? என்று வினவுகிறார்கள். ஆனால் கட்டுரைத் தலைப்பின் நோக்கம் தேங்காய்களில் புற்றுநோய் இருக்கிறது என்பதல்ல. தேங்காய்களில் காணப்படும் 'மைற்' நோய் பொதுமக்கள் மத்தியில் தேங்காய்ப் புற்றுநோய் என்று தவறாக விளங்கப்பட்டு வந்தது. அதனைத் தெளிவாக்கவே அவ்வாறு குறிப்பிடப்பட்டது.**

### சிலந்திச் சிற்றுண்ணிக் கட்டுப்பாட்டு முறைகள் (MITE)

யாழ்ப்பாணம் உட்பட இலங்கையில் தென்னை வளரும் பிரதேசங்களில் 'மைற்' சிற்றுண்ணியைக் கட்டுப்படுத்தி தமது தென்னை வளத்



தைக் காப்பாற்ற எல்லோரும் ஆவலாக இருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

அண்மையில் லுனுவிலவில் உள்ள தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் இந்தியா, பிலிப்பைன்ஸ் உட்படப் பல நாடுகளின் ஆராய்ச்சியாளர்கள் 'மைற்'றைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். நோயால் பாதிக்கப்பட்ட தென்னைகள் உள்ள பிரதேசங்களுக்கும் சென்று அவர்கள் பார்வையிட்டுள்ளனர்.

தற்பொழுது தடிச்சல் என்ற கீரை வகை தோட்டக் காணிகளில் காணப்படுகிறது.

ஒரு வகை அந்துப் பூச்சியின் புழுக்கள் அதன் இலைகள், பூக்கள் எல்லாவற்றையும் அழித்திருப்பதையும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறு இயற்கையே அந்தக் கீரை வகையை அழிக்க ஒரு எதிரியைத் தோற்றுவித்துள்ளது.

அதேபோன்று 'மைற்' பூச்சியை அழிப்பதற்கு அதற்கு எதிரான பூச்சி தோன்ற வேண்டும் அல்லது தோற்று



*'மைற்' குராரேனிஸ் சிலந்திப் பூச்சியின் கோரத் தாக்குதலுக்குள்ளான தேங்காய்களை இப்பக்கத்தில் உள்ள மூன்று படங்களிலும் காணலாம்.*

விக்கப்பட வேண்டும். இது இயற்கைக்கும் ஆராய்ச்சி நிலையத்துக்கும் உள்ள பொறுப்பாகும்.

தென்னையைப் பொறுத்த வரை பல வருடங்களுக்கு முன்பு தென் பகுதியில் 'புரோமிக்கோதிகா' என்னும் இலைச்சுரங்கமறுப்பி வண்டின் தாக்கம் ஏற்பட்டுத் தென்னை ஓலைகள் சேதமடைந்தன. உடனடியாக தேசிய மட்டத்தில் இந்த நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதனால் நோய் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டது.

அதேபோன்று - யாழ்ப்பாணத்தில் வெங்காயச் செய்கையைப் பாதித்த ஸ்பொடப்ரா எக்ஸிகியூவர் தாள்கோதிப் புழுவைக் கட்டுப்படுத்த விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து பல நிறுவனங்கள் தொழிற்பட்டன.

இதேபோன்று தென்னையில் ஏற்படும் 'மைற்' நோயைக் கட்டுப்படுத்த இந்தியாவில் இருந்து மருந்து கள் கொண்டுவரப்பட்டு தென்பகுதியில் இந் நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அங்கு அரசின் பங்களிப்பு இருந்தது. ஆனால் யாழ்ப்பாணத்தில் இந்தச் செயற்பாட்டை உத்வேகத்துடன் செயற்படுத்துதைற்குரிய மருந்துகளை உடனடியாகக் கொண்டு வரக்கூடிய வாய்ப்புகள் இல்லை. அவற்றை எடுத்துவர அனுமதி பெறவேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. அதிகாரிகள் தங்கள் சக்திக்குட்பட்ட முறையில் ஆலோசனைகளைத் தெரிவித்தாலும் சில வழங்கல்கள் எல்லைப்படுத் தப்பட்டனவாகவே உள்ளன.

எனவே இந்த நோயைக் கட்டுப்படுத்த கிராம மட்டத்தில் உள்ள நிறுவனங்கள், பொது அமைப்புகள் மட்டத்திலும், அரச அரசியல் மட்டத்திலும் உயர் பங்களிப்பு மிக மிக அவசியமானதாகும்.


### சிற்றுண்ணிக் கட்டுப்பாட்டு முறைகள்

- பண்பாட்டுச் செயன்முறை
- உள்ளி + வேப்பிலைக் கரைசல் தெளிப்பு
- உள்ளி + வேப்பெண்ணை தெளிப்பு -
- சலபர் கரைசல் தெளிப்பு
- சல்பர் + நாசினிக் கரைசல் தெளிப்பு
- அகத்துறிஞ்சும் நாசினித் தெளிப்பு (மெற்றாசின் ரொக்ஸ் - பியூறடான் ரொக்ஸ்)

வைத்தியரிடம் ஒரு நோயைப் பற்றி நாம் தெரிவிக்கும் போது அவர் அதற்கான பரிகாரங்களைக் கூறுவார். அதை எவ்வாறு கவனத்துடன் செவிமடுத்து, அதன்படி செயற்பட்டு, எமது 'நோயைக் குணப்படுத்துகிறோமோ அதுபோலவே பல தென்னை நோயைக் கட்டுப்படுத்தவும் பல நடைமுறைகளைக் கையாள வேண்டியுள்ளது. அதாவது சிகிச்சை முறைகளை எவ்வாறு, எப்போது, எத்தனை தடவை, எந்த வேளையில் என்ற விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். அப்பொழுதுதான் எமது முயற்சி வெற்றியளிக்கும்.

### பண்பாட்டுச் செயன்முறை

தென்னை மரங்களை அண்டிய பகுதி சுத்தமாக இருக்க வேண்டும். மரத்தில் காணப்படும் பாதிக்கப்பட்ட சகல குரும்பைகள் - தேங்காய்



என்று கருதுபவற்றைத் தவிர அனைத்தையும் மரத்திலிருந்து வெட்டி எடுத்து எரிக்க வேண்டும். காய்ந்த பாளைகள், ஓலைகள் ஆகியனவற்றையும் அகற்றி மரத்தைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். தேவை ஏற்படின் முட்டுக் காய்களையும் அகற்றலாம்.(விசிறும் கிருமி நாசினியைப் பொறுத்து).

### உள்ளி + வேப்பிலைக் கரைசல்

நாம் உள்ளியை வெள்ளைப் பூண்டு, காயம் உள்ளி, இலசுணம், வெள்ளை வெங்காயம் எனப் பல பெயர்கள் கொண்டு அழைப்போம். இது வீடுகளில் இருக்க வேண்டிய முக்கிய பொருள்.

இதேபோன்று வேப்பமரத்தையும் பராசக்தி, வேப்பமாறு, நிம்பா, வாதரி பிசுமந்தம் எனப் பல்வேறு பெயர் கொண்டு அழைப்போம். காற்றினால் பரவுகின்ற மிக நுண்ணிய கிருமிகளைக் கொல்லும் சக்தி கொண்டது வேப்பமரக்காற்று. விவசாயத்துறையில் பூச்சி, புழுக்களைக் கட்டுப்படுத்த வேப்பமரத்தின் பட்டை, இலை, விதை ஆகியவற்றின் சாறும் எண்ணெயும் பயன்படுத்தப்படுகின்றன.

### கரைசல் தயாரித்தல

தேவையான பொருள்கள்:-

50 கிராம் தொடக்கம் 100 கிராம் வரையான உள்ளி. இது 15 தொடக்கம் 30 உள்ளிப்பல் எண்ணிக்கையுடையது - அத்துடன் 50 கிராம் வேப்பம் இலை நெட்டு - இது 20 நெட்டுக்குச் சமனானது.

உள்ளியின் தோலை அகற்றிய பின்பு அதனை அம்மியால் அல்லது உரலில் அல்லது பிளண்டரில் இட்டு அதனுடன் வேப்பம் இலையையும் சேர்த்து நன்றாக அரைக்க வேண்டும்.

இக்கலவையை ஒன்று தொடக்கம் ஒன்றரை லீற்றர் நீரில் கரைத்து போத்தலில் எடுத்துச் சென்று நேரடியாகக் குரும்பைகள், விரியாத பாளைகள் என்பன நன்கு நனையத்தக்கதாக பூச வேண்டும் அல்லது தெளிக்க வேண்டும். தெளிக்கும் போது குரும்பையிலிருந்து கரைசல் வழிந்தோடத்தக்கதாகத் தெளிக்காமல் குரும்பை முகிழ் நனையத்தக்கதாகத் தெளித்தல் வேண்டும். இது என்னுடைய செய்கை அனுபவங்களில் ஒன்று.

இந்த முறையானது இலகுவானது, செலவு குறைவானது, தெளிப்பவருக்கு இடையூறு அற்றது. ஒரு மரத்துக்கு மட்டுமே இந்த அளவு முறை என்பது குறிப்பிடத்தக்கது. தெளிகருவியினுள் சீலையால் வடித்த கரைசலை விட்டும் தெளிக்கலாம்.

**மெக்சிக்கோவின் கரோரா என்ற இடத்தில் இருந்துதான் குறோனிஸ் (Querreronis) வகை 'மைற்' சிற்றுண்ணி இங்கு பரவியது. 1960,1970 ஆண்டு காலப்பகுதிகளில் அங்கு இந்நோயின் தாக்கம் காணப்பட்டது.**

**1997இல் இந்தியாவில் கேரளாவிலுள்ள எர்ணாகுளம் பகுதியில் இந்நோய்த்தாக்கம் உணரப்பட்டது. பின்னர் அங்கிருந்து காற்று மூலம் இலங்கையில் பரவி இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.**

**எனினும் கரட் கிழங்கினுடைய வடிவம் கொண்ட 'மைற்' சிற்றுண்ணியின் தலைப்பாகத்திலேயே அதன் கால்கள் காணப்படும். இது 200 (mic) மைக்ரன் நீளமுடையது. சாதாரண கண்ணால் இலகுவாகப் பார்க்க முடியாதது.**

**இச்சிற்றுண்ணியானது 30 முதல் 40 வரையான நாள் வயதுடைய குரும்பைகளில் தான் அதிகம் தாக்கத்தை ஏற்படுத்தும். ஒரு மரத்தில் 10 வீதம் பூச்சிகள் காணப்பட்டால் 30 வீத விளைவுகள் பாதிக்கப்படும். இது நோய்த்தாகம் காணப்படும் காலகட்டத்தில் குரும்பைகள் உதிரும்.**

**இப்பூச்சி காலை வேளையில் தான் அதிகமாக காற்றில் கலந்து வேறு மரங்களுக்குப் பரவும். தேன் பூச்சிகளின் மூலமும் இது பரவும் சாத்தியம் உண்டு. இதைக் கட்டுப்படுத்த 'சான்சோனி' என்ற பங்கசு பயன்படுத்தப்படுகிறது.**

**கந்தையா தனிநாயகம்**
**(DIP. IN AGRI.)**
*தோட்ட முகாமைத்துவப் பகுதி – நவை*

(கட்டுப்பாட்டு முறைகள் தொடரும்)

## கமமும் புலமும்

தயாரிப்பு: ஜெயஸ்ரீ

---



**யாழ்.மாவட்டத்தில் தொடரும் யுத்தம் மற்றும் பல்வேறு பிரச்சினைகள் காரணமாக தென்னை மரங்கள் அழிவுற்று வருகின்றன.**

**போர் உக்கிரமாக இடம்பெற்ற பகுதிகளில் தென்னை மரங்களும் பெரிதும் அழிவுற்றதுடன் பீடைத்தாக்கங்களாலும் அவை அழிவைச் சந்தித்துள்ளன.**

**இவ்வாறு அழிவுகள் தொடருமானால எதிர்காலத்தில் தேங்காய்களுக்கு பெரும் தட்டுப்பாடு தோன்றும் அபாயமும் உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு யாழ். மாவட்டத்தில் உள்ள தொண்டு நிறுவனங்களும் பிரதேச சபைகளும் தென்னை நாற்றுக்களை மக்களுக்கு விநியோகிக்கும் நல்லதொரு கைங்கரியத்தைச் செய்து வருகின்றன.**

**இவ்வாறு விநியோகிக்கும் தென்னை நாற்றுக்களைப் பெற்றுக்கொள்ளும் மக்கள் தமது காணிகளில் அவற்றை நட்டுத் தென்னை வளத்தை பெருக்குதல் மிகவும் நன்மை தரும் செயலாகும்.**

**வலி.தென்மேற்கு பிரதேச சபையினால் அண்மையில் தென்னம் நாற்றுக்கள் வழங்கப்பட்டன. பிரதேசசபைத் தலைவரிடம் இருந்து சனசமூக நிலைய பிரதிநிதிகள் அதனைப் பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம். (ஜ-10)**

---

### மீன்பிடித் தடையை ஆட்சேபித்து

# வடமராட்சி வடக்கு மீனவர் யாழ்.நகரில் ஊர்வலம்

யாழ்ப்பாணம்,மே30

சக்கோட்டை தொடக்கம் தொண்டமனாறு வரையிலான கடற்பகுதியில் மீன்பிடிக்க அனுமதி மறுக்கப்பட்டதை அடுத்து உண்ணாவிரதம் இருந்து வந்த வடமராட்சி வடக்கு பிரதேச மீனவர்கள் நேற்றுமுன்தினம் காலை யாழ்.நகரில் ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

யாழ்.பஸ் நிலையப் பகுதியில் ஒன்று கூடிய சுமார் 150இற்கு மேற்பட்ட மீனவர்கள் அங்கிருந்து ஸ்ரான்லி வீதியூடாக ஈ.பி.டி.பியின் மாவட்ட செயலகம் வரை ஊர்வலமாகச் சென்றனர். பின்னர் அங்கு வைத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்த இவர்கள் மகஜர் ஒன்றையும் அமைச்சரிடம் கையளித்தனர் என ஈ.பி.டி.பி வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீனவர்களிடம் மகஜரைப் பெற்றுக் கொண்ட அமைச்சர் வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயக் கொழும்பில் மாநாடு ஒன்றைக் கூட்ட ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தார் எனவும்-

அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

ஓம் ஸ்ரீ விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

30-05-2001

HAPPY BIRTHDAY



## செல்வன் சுஜன் கருணாகரன்

**117, சிவப்பிரகாசம் வீதி, நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த**
*திரு. திருமதி கருணாகரன் – தங்கராணி தம்பதிகளின்*
**செல்வப்புதல்வன் செல்வன் சுஜன்**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (30-05-2001) புதன்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். சுஜனை அன்பு அப்பா, அம்மா, ஐயா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், அக்காமார், அண்ணாமார், தங்கைமார், மச்சான்மார், மச்சாள்மார், அயலவர், நண்பர்கள் அனைவரும் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்மன் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

*நாச்சிமார் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.* (88352)

**க.கருணாகரன்(கருணா)**
(அப்பா)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
04
-
11
-
1924



மறைவு
30
-
04
-
2001

## அமரர் கண்ணையா கனகரத்தினம் அவர்கள்

முப்பதுடன் ஒன்று முடிகின்ற போதிலும்
எப்பொழுதும் எம்முடன் நீ இருப்பாய் ஐயா!
முப்பொழுதும் உன் முகம் சிரித்தபடி எம் கண்ணில்
அப்படியே காட்சிதரும் அழுகையும் சேர்ந்து வரும்!
இப்படித்தான் வாழவேண்டும் என்று நீ கற்றுக்தந்தாய்!
அப்படித்தான் ஐயா! உன் சொற்படியே வாழ்வோம்!
எப்படித்தான் மறப்போம்! எங்கள் அன்புத்தெய்வமே?
அப்பன் அடி சேர்வாய் எம் அஞ்சலிகள் ஏற்றிடுவாய்!

**உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்.**

*நவாலி கிழக்கு,*
*நவாலி.* (88291)

அன்பு மனைவி,
பிள்ளைகள்.


**அனைத்து லங்கா சிமெந்து ஊழியர்களினதும் கவனத்துக்கு**

## விசேட கலந்துரையாடல்

**மாண்புமிகு அமைச்சர் திரு. K.N. டக்ளஸ் தேவானந்தா அவர்கள் அனைத்து லங்கா சிமெந்து ஊழியர்களையும் தொழிற்சாலையின் எதிர்காலம் பற்றியும், தொழிலாளர்களின் பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாட அழைக்கிறார். ஆகவே 31.05.2001 வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் ஊழியர்கள் அனைவரையும் யாழ். வீரசிங்கம் மண்டபத்துக்கருகில் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

*கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம்,*
*லங்கா சிமெந்து நிறுவனக் கிளை,*
*காங்கேசன்துறை.* (C/16913) - செயலாளர்.


## ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சி, மே30

கடந்த 23ஆம் திகதி செட்டிக்குளம் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் காயம் அடைந்திருந்த போராளி ஒருவர் கடந்த 25ஆம் திகதி உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

மன்னாரைச் சேர்ந்த லெப். கேணல் சத்தியநாதன் (செல்லத்துரை தவனேஸ்வரன்) என்பவரே உயிரிழந்தவராவ (ம-5)

## சீருடையில் நடமாடிய மாணவர்கள் கைது

கண்டி, மே30

கண்டி நகரில் பாடசாலை வேளையில் பொது இடங்களில் சீருடையுடன் நடமாடிய 25 மாணவர்களை கண்டிப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் பல்வேறு குற்றச் செயல்களில் பாடசாலை மாணவர்கள் ஈடுபட்டு வருகின்றனர் என பொலீஸாருக்குத் தகவல் கிடைத்ததையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த மாணவர்கள் அனைவரும் கண்டி நகரில் உள்ள பிரபல ஆண்கள் பாடசாலை ஒன்றைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ம-5)

## சிவில் நிர்வாக அலுவலகம் அமைப்பு

தென்மராட்சி, மே30

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள தமது சொத்துக்களைப் பார்வையிடச் செல்லும் இடம் பெயர்ந்த மக்களின் நலன்களைப் பேணுவதற்காக சிவில் நிர்வாக அலுவலகம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி - தனங்களப்பு வீதியில் பள்ளிவாசல் கடைக்கட்டடத்தில் இந்த அலுவலகம் இயங்குகிறது.

தென்மராட்சியில் கைதடி, கொடிகாமம், மீசாலை, கச்சாய், யாக்கரு ஆகிய இடங்களில் ஏற்கனவே சிவில நிர்வாக அலுவலகங்கள் இயங்குவது குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

## பாலர் விளையாட்டு விழா

காரைநகர், மே30

காரைநகர் அம்பாள் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை விளையாட்டு மைதானத்தில் நா.குகநேசன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறைப் பிரதேசசபைத் தலைவர் ந.மதனராசாவும், கௌரவவிருந்தினர்களாக காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலய அதிபர் பண்டிதர் சு.வேலாயுதபிள்ளை, ஓய்வுபெற்ற ஆசிரியர் பண்டிதர் க.வைத்தீஸ்வரக்குருக்கள், காரைநகர் தென்னிந்தியத் திருச்சபை வண.பிதா எஸ்.செல்வநாயகம் ஆகியோரும் கலந்து கொள்ள உள்ளனர். (ஐ-73)

## இருவர் கைது

மட்டக்களப்பு,மே30

மட்டக்களப்பு ஆலங்கேணிப்பகுதியில் கிரனேட்டுகளுடன் நடமாடியதாகக் கூறப்படும் இரண்டு இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யபட்டுளளதாக அறிவிக்கப்படுகின்றது.

வந்தாறுமூலையைச் சேர்ந்த வேதவாளன் உதயகுமார் (வயது-22), தம்பிராஜா குகநாயகம் (வயது-22), ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர். (உ-4)

## தொழில் நுட்ப திணைக்கள உப பணிமனை

யாழ்ப்பாணம்,மே30

தொழில் நுட்பக்கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் வடக்கு - கிழக்கு மாகாணத்தை உள்ளடங்கிய - பிராந்தியம் 4இன் - உப பணிமனை யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் -

யாழ்.தொழில் நுட்பக் கல்லூரி வளாகத்தில் இந்தப் பணிமனையின் தற்காலிக அலுவல்கம் இயங்குவதாக, புதிய பிராந்தியப் பணிப்பாளராக நேற்று முன்தினம் பதவியேற்ற ந.யோகராஜன் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் யாழ்.தொழில் நுட்பக் கல்லூரியின் அதிபராக எஸ். கைலநாதன் நியமிக்கப்பட்டிருப்பதாக அறியவந்தது. (உ-ஒ)

# யாழ்.ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் தொடர்ந்து பணிபுரிவார்

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரட்ணத்தின் பதவி விலகல் கடிதத்தை நிராகரித்துள்ள சுகாதார அமைச்சு அவரைத் தொடர்ந்து கடமையாற்றுமாறு கேட்டுள்ளது.

இது தொடர்பான உத்தியோக பூர்வ அறிவித்தலை சுகாதார அமைச்சின் செயலர் நேற்று முன்தினம் வெளியிட்டார்.

அமைச்சின் அறிவிப்பை அடுத்து பணிப்பாளர் தொடர்ந்து கடமையாற்ற முடிவு செய்திருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.


முன்னதாக ஒரு மாத முன்னறிவித்தலுடன், பதவி விலகல் கடிதத்தை பணிப்பாளர் அனுப்பியிருந்ததும் -

அவரது பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக்கொள்ள வேண்டாமென்று, யாழ்.மாவட்ட வைத்தியர் சங்கம் உட்பட மருத்துவத்துடன் தொடர்புடைய பல்வேறு சங்கங்கள் சுகாதார அமைச்சுக்குத் தனித்தனியாகக் கோரிக்கைக் கடிதங்களை அனுப்பியிருந்ததும் - தெரிந்தவையே. (உ-ஒ-139)

# இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

2001~05~30

HAPPY BIRTHDAY



## செல்வி சி.நிஷாயினி

சரசாலை வடக்கைச் சேர்ந்த
**திரு.திருமதி சிவகுமாரன் - தயாமதி தம்பதிகளின்**
**செல்வப் புதல்வி செல்வி நிஷாயினி**


தனது இரண்டாவது பிறந்த தினத்தை இன்று (2001-05-30) புதன்கிழமை தனது தற்காலிக இல்லத்தில் வெகு குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மாமார், அப்பம்மா, தாத்தாமார், மாமா, சித்தாமார், அத்தைமார், பெரியம்மாமார், பெரியப்பாமார், சித்தப்பாமார், அக்காமார், அண்ணா, ஜனா மச்சி, லண்டனில் இருக்கும் சித்தப்பா, ஹொலண்டில் இருக்கும் சித்தப்பா ஜேர்மனியில் இருக்கும் மாமா, ஸ்கந்தபுரத்தில் இருக்கும் பாலன் மாமா குடும்பத்தினர், ராகினி அன்ரா மற்றும் உற்றார், உறவினர்கள் சீரும் சிறப்பும் பெற்று பல்கலையும் கற்று சரசாலை நுணுவில் பிள்ளையார் அருளுடன் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

*தற்காலிக முகவரி:*
*'பூம்புகார் இல்லம்'*
*வதிரி, கரவெட்டி.* (88379)

**மு.சிவாகரன் (மாமா)**
*சரசாலை வடக்கு,*
*சரசாலை.*

# ஓராண்டு நினைவுகளில்...

மண்ணில்
08
-
10
-
1942



விண்ணில்
09
-
06
-
2000

## அமரர் க.சி.கிருஷ்ணசாமி

*(ஓய்வு பெற்ற தபாலதிபர், பகுதிநேர ஆங்கில ஆசிரியர், யாழ்.வீரசிங்கம் ம.வி, உரிமையாளர் "அயோத்தி தொடர்பகம்")*

ஆண்டுகள் ஆயிரம் ஆயினும் என்ன?
நீண்ட உம் நினைவுடன் செயலுமாற்ற
பூண்டுள்ளோம் விரதம் புவியில், புனிதா!
தாண்டவன் தாளினில் கலந்தே வாழ்க!

எமது குடும்பத்தலைவரின் இன்றைய (30-05-2001 - புதன்கிழமை) ஓராண்டு நினைவு தினத்தில், அன்புடைய நெஞ்சத்தினர் யாவரும் இதனையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்று ஆத்மசாந்தி வைபவத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முகவரி:
*"முதலியார் வளவு"*
*இமையாணன், உடுப்பிட்டி.* (88360)

திருமதி தெ.கிருஷ்ணசாமி *(மனைவி)*,
*பிள்ளைகள்:* திரு.திருமதி திலீபன்,
திரு.கி.திவ்யன்,
திரு.கி.சியாமளன்.

### உலக சுகாதார ஸ்தாபன நிதி உதவியுடன்

# யாழ்.ஆஸ்பத்திரியிலிருந்து கழிவுகளை குழாய் மூலம் வெளியேற்ற நடவடிக்கை

## வடக்கு அபிவிருத்தி அமைச்சு மேற்கொள்ளும்

யாழ்ப்பாணம்,மே30

யாழ்ப்பாணம் போதனாவைத்திய சாலையில் இருந்து வெளியேறறப் படும் கழிவு நீரை எதுவித தடையுமின்றி முறையாக வெளியேற்ற வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு- கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஈ.பி.டி.பி அமைப்பின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனாவைத்திய சாலையில் இருந்து வெளியேறறப் படும் கழிவு நீர் முறையாக வெளியேற்றப்படாமல் தேங்கி நிற்பதாகவும், இதனால் பலத்த சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளது என்றும் -

உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு ஆகியவற்றின் நிதியுதவியுடன் இந்தக் கழிவு நீர் வெளியேற்றும் திட்டம் மேற்கொள்ளப்படும் என்றும் -

ஆஸ்பத்திரியில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகளைப் பாரிய பிளாஸ்ரிக் குழாய்கள் மூலம் கடலுக்குள் கொட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. என்றும் - அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்போதனா வைத்தியசாலை வார்ட்டுகள் உட்பட ஆஸ்பத்திரியின் அனைததுப் பகுதிகளுக்கும் 24 மணி நேர குழாய் நீர் வசதி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், யாழ்.நகரின் சுற்றுச் சூழலினை மேம்படுத்த பல அபிவிருத்தித் திட்டங்களை தாம் எடுக்கப்போவதாகவும் -

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்தார் என்று குறிப்பில் மேலும் கூறப்பட்டுள்ளது. (ம)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்.மே30

யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளி இடங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதி பெற விண்ணப்பித்தவர்களில் இம்மாதம் 26ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

### சங்கானை

| | | |
|---|---|---|
| (153308ஏ) | (153308பி) | (173191ஏ) |
| (173191பி) | (186835ஏ) | (186835பி) |
| (188719ஏ) | (189585ஏ) | (190531ஏ) |
| (190725ஏ) | (191803ஏ) | (191822ஏ) |
| (191822பி) | (191822சி) | (191896ஏ) |
| (191896பி) | (191896சி) | (191896டி) |
| (191925ஏ) | (191951ஏ) | (191951பி) |
| (192202ஏ) | (192202பி) | (192203ஏ) |
| (192407ஏ) | (192407பி) | (192407சி) |
| (192427ஏ) | (192461ஏ) | (192461பி) |
| (193512ஏ) | (193526ஏ) | (193566ஏ) |
| (193572ஏ) | (193588ஏ) | (193628ஏ) |
| (193628பி) | (193628சி) | (193666ஏ) |
| (193666பி) | (193666சி) | (193707ஏ) |
| (193707பி) | (193751ஏ) | (193751பி) |
| (193751சி) | (193751டி) | (193752ஏ) |
| (193752பி) | (193752சி) | (193763ஏ) |
| (194199ஏ) | (194243ஏ) | (194243பி) |
| (194347ஏ) | (194347பி) | (194348ஏ) |
| (194348பி) | (194349ஏ) | (194380ஏ) |
| (194380பி) | (194380சி) | (194413ஏ) |
| (194413பி) | (194457ஏ) | (194457பி) |
| (194458ஏ) | (194851ஏ) | (194879ஏ) |
| (194926ஏ) | (194962ஏ) | (194962பி) |
| (194962சி) | (195009ஏ) | (195054ஏ) |
| (195099ஏ) | (195099பி) | (195131ஏ) |
| (195888ஏ) | (195888சி) | (196888பி) |

### நல்லூர்

| | | |
|---|---|---|
| (189341ஏ) | (189515ஏ) | (189515பி) |
| (189566ஏ) | (189566பி) | (191928ஏ) |
| (192206ஏ) | (192206பி) | (192390ஏ) |
| (192412ஏ) | (192412பி) | (192487ஏ) |
| (192487பி) | (192487சி) | (193540ஏ) |
| (193601ஏ) | (193601பி) | (193602ஏ) |
| (193608ஏ) | (193702ஏ) | (193702பி) |
| (193769ஏ) | (193769பி) | (193769சி) |
| (194231ஏ) | (194323ஏ) | (194323பி) |
| (194323சி) | (194339ஏ) | (194384ஏ) |
| (195023ஏ) | (195067ஏ) | (195067பி) |
| (195067சி) | | |

### சண்டிலிப்பாய்

| | | |
|---|---|---|
| (158827ஏ) | (158827பி) | (158827சி) |
| (179495ஏ) | (179495பி) | (184970ஏ) |
| (184970பி) | (189557ஏ) | (189577பி) |
| (189577சி) | (190733ஏ) | (192258ஏ) |
| (192258பி) | (192258சி) | (192258டி) |
| (192258ஈ) | (192386ஏ) | (193568ஏ) |
| (193568பி) | (193612ஏ) | (193650ஏ) |
| (193650பி) | (193653ஏ) | (193673ஏ) |
| (193673பி) | (193698ஏ) | (193698பி) |
| (193745ஏ) | (193745பி) | (193750ஏ) |
| (193767ஏ) | (193772ஏ) | (194268ஏ) |
| (194268பி) | (194303ஏ) | (194374ஏ) |
| (194374பி) | (194374சி) | (194374டி) |
| (194375ஏ) | (194383ஏ) | (194392ஏ) |
| (194402ஏ) | (194450ஏ) | (194478ஏ) |
| (194478பி) | (194478சி) | (194842ஏ) |
| (194963பி) | (195037ஏ) | (195037பி) |
| (195037சி) | (195062ஏ) | (195861ஏ) |

### தெல்லிப்பழை

| | | |
|---|---|---|
| (190671ஏ) | (194373ஏ) | (194373பி) |
| (194373சி) | (194377ஏ) | (194908ஏ) |
| (194908பி) | (194963ஏ) | (195012ஏ) |
| (195012பி) | | |

### உடுவில்

| | | |
|---|---|---|
| (178745ஏ) | (178745பி) | (178745சி) |
| (180369ஏ) | (180369பி) | (183277பி) |
| (183277சி) | (183277டி) | (183277ஈ) |
| (183277எவ்) | (190576ஏ) | (192384ஏ) |
| (192384பி) | (192411ஏ) | (192411பி) |
| (193569ஏ) | (193569பி) | (193569சி) |
| (193569டி) | (193569ஈ) | (193569எவ்) |
| (193630ஏ) | (193681ஏ) | (193695ஏ) |
| (193695பி) | (193695சி) | (193695டி) |
| (193715ஏ) | (193715பி) | (193728ஏ) |
| (194222ஏ) | (194222பி) | (194315ஏ) |
| (194316ஏ) | (194346ஏ) | (194346பி) |
| (194346சி) | (194350ஏ) | (194350பி) |
| (194910ஏ) | (194910பி) | (194944ஏ) |
| (195024ஏ) | (195111ஏ) | (195111பி) |
| (195111சி) | (195112ஏ) | (195863ஏ) |

இம்மாதம் 27ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் விவரம் வருமாறு:

### சங்கானை

| | | |
|---|---|---|
| (176619ஏ) | (186860ஏ) | (189321ஏ) |
| (189321பி) | (189324ஏ) | (189324பி) |
| (189324சி) | (190467ஏ) | (190467பி) |
| (190467சி) | (190467டி) | (190679ஏ) |
| (191821ஏ) | (191867ஏ) | (192469ஏ) |
| (193510ஏ) | (193511ஏ) | (194317ஏ) |
| (194463ஏ) | (194463பி) | (194881ஏ) |
| (194948ஏ) | (194949ஏ) | (195065ஏ) |
| (195066ஏ) | (195066பி) | (195139ஏ) |
| (195139பி) | (195836ஏ) | (195846ஏ) |
| (195846பி) | (195846சி) | (195846டி) |
| (195846ஈ) | (195846எவ்) | (195906ஏ) |
| (195907ஏ) | (195907பி) | (195943ஏ) |
| (195981ஏ) | (195983ஏ) | (195996ஏ) |
| (196036ஏ) | (197189ஏ) | (197189பி) |

### நல்லூர்

| | | |
|---|---|---|
| (172735ஏ) | (172735பி) | (172735சி) |
| (172735டி) | (172859ஏ) | (173026ஏ) |
| (189513ஏ) | (191916ஏ) | (191973ஏ) |
| (192287ஏ) | (192362ஏ) | (192404ஏ) |
| (193535ஏ) | (193535பி) | (193535சி) |
| (193535டி) | (193535ஈ) | (193535எவ்) |
| (193570ஏ) | (193570பி) | (193643ஏ) |
| (193730ஏ) | (193730பி) | (194195ஏ) |
| (194195பி) | (194232ஏ) | (194232பி) |
| (194242ஏ) | (194242பி) | (194242சி) |
| (194329ஏ) | (194397ஏ) | (194481ஏ) |
| (194481பி) | (194481சி) | (194481டி) |
| (194844ஏ) | (194844பி) | (195057ஏ) |
| (195804ஏ) | (195891ஏ) | (196060ஏ) |
| (199447ஏ) | | |

### சண்டிலிப்பாய்

| | | |
|---|---|---|
| (170368ஏ) | (170368பி) | (175914ஏ) |
| (186859ஏ) | (186859பி) | (186859சி) |
| (186859டி) | (187028ஏ) | (187028பி) |
| (187028சி) | (187077ஏ) | (187077பி) |
| (191978ஏ) | (192474ஏ) | (192474பி) |
| (193518ஏ) | (193518பி) | (193518சி) |
| (194376ஏ) | (194376பி) | (194946ஏ) |
| (194946பி) | (194988ஏ) | (195029ஏ) |
| (195029பி) | (195058ஏ) | (195110ஏ) |
| (195110பி) | (195138ஏ) | (195145ஏ) |
| (195145சி) | (195145டி) | (195582பி) |
| (195852ஏ) | (195963ஏ) | (196019ஏ) |
| (196040ஏ) | (196040பி) | (196096ஏ) |
| (197118ஏ) | | |

### தெல்லிப்பழை

| | | |
|---|---|---|
| (192370ஏ) | (192370பி) | (194345ஏ) |
| (194345பி) | (194353ஏ) | (196100ஏ) |

### உடுவில்

| | | |
|---|---|---|
| (186874ஏ) | (187070ஏ) | (191772ஏ) |
| (191946ஏ) | (192019ஏ) | (193724ஏ) |
| (194479ஏ) | (194479பி) | (194479சி) |
| (194938ஏ) | (194938பி) | (195050ஏ) |
| (195109ஏ) | (195850ஏ) | (195853ஏ) |
| (195881ஏ) | (195881பி) | (195882ஏ) |
| (195897ஏ) | (195897பி) | (195897சி) |
| (195898ஏ) | (195913ஏ) | (195913பி) |
| (195920ஏ) | (195920பி) | (196006பி) |
| (196074ஏ). | | |

## தேடுதல்

சுழிபுரம்,மே30

சுழிபுரம் தபாற்கந்தோர் சந்தியில் இருந்து சித்தன்கேணி சந்தி வரையான பகுதியை நேற்று முன்தினம் திங்கள் அதிகாலை முதல் சுற்றிவளைத்துப் படையினர் தேடுதல்களை நடத்தினர்.

வீடுவீடாகச் சென்று படையினர் குடும்ப அட்டை, அடையாள அட்டை என்பவற்றைப் பரிசோதனை செய்தனர். (ம-28)

## வாராந்த நிகழ்வு

செல்வச் சந்நிதி ஆலயசந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறும் வாராந்த நிகழ்வுத் தொடரில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு 'கந்தன் கருணை' என்ற தலைப்பில் ஆசிரியர் கு. மனோகரன் கருத்துரை வழங்குவார். (ம)

## வெள்ளி விழா

புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபராக கடந்த 25 ஆண்டுகள் தொடர்ச்சியாகச் சேவையாற்றிய அருட்திரு. ய.பே.ஞானப்பிரகாசம் அடிகளாரின் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் வெள்ளி விழா நாளை வியாழக்கிழமை கல்லூரியில் சிறப்பான முறையில் நடைபெறவுள்ளது. (ம-48)

### மாவட்ட மட்டத்திலான

# வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ்.பெண்கள் அணி 'சாம்பியன்'

திருகோணமலை,மே30

திருகோணமலையில் நடைபெற்ற வடக்கு - கிழக்கு மாகாணத்தின் மாவட்ட மட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ்.மாவட்டப் பெண்கள் அணி 'சாம்பியன்' ஆனது.

வவுனியா மாவட்ட அணியுடனான இறுதிப் போட்டியில் 27 - 47 என்ற புள்ளிகளால் யாழ்.மாவட்ட அணியினர் வெற்றி பெற்றனர்.

இதேசமயம் -

அங்கு நடைபெற்ற கூடைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இரு பிரிவுகளிலும் மட்டக்களப்பு மாவட்ட அணிகள் சாம்பியனாகி உள்ளன.

யாழ்மாவட்ட அணிகள் இந்த இரு பிரிவுகளிலும் இரண்டாவது இடத்தைப் பெற்றன. (உ-ஒ)

# காவலில் இருக்கும் படையினர் சிறைக் காவலருடன் மோதல்

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் படையினருக்கும் - சிறைக்காவலர்களுக்கும் இடையில் கடந்த ஞாயிறன்று இரவு 7 மணியளவில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் சிறைக் காவலர்கள இருவர் காயமடைந்தனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள படையினர் ஒருவருக்கும் சிறைக்காவலர் ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே பின்னர் மோதலாக வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சம்பவத்தை அடுத்து அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 17 படையினர் நேற்று முன்தினம் கொழும்பு மகஸீன் சிறைச்சாலைக்கு இடமாற்றப்பட்டனர். (உ-7)

## வாசகர் திருமுகம்

### இடம்பெயர்ந்த மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினை

கடந்த ஆண்டில் யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலைக்கு முகம்கொடுக்க முடியாது பல பகுதிகளிலும் வாழ்ந்த மக்கள் வெளியேறி அகதிகளாக குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்து வருவது யாவரும் அறிந்ததே. இவர்களில் தென்மராட்சிப் பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்கள் வடமராட்சிப் பகுதியில் நலன்புரி நிலையங்களிலும் நண்பர், உறவினர்களின் வீடுகளிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்களில் கரவெட்டி கிழக்கு மக்கள் இன்று அத்தியாவசியமான தேவைகளில் ஒன்றான குடி தண்ணீர் இன்றியே பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். நலன்புரி நிலையங்களுக்கு அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் குடிதண்ணீரை பவுஸர் மூலம் வழங்கி வருகின்றனர். ஆனால் குடி தண்ணீர் மேலதிக தேவைகளுக்கு போதுமானதல்ல. நண்பர், உறவினர் வீடுகளில் வாழும் அதிகமான இடம்பெயர்ந்த மக்கள் கரவெட்டி கிழக்கு அத்துளு அம்மன் ஆலயம் அருகில் அமைந்துள்ள பொதுக் கிணற்றிலும் அதன் அருகில் அமைந்துள்ள குழாய்க் கிணற்றிலும் நீரைப் பெற்றுத் தமது தேவையைப் பூர்த்தி செய்கின்றனர். தற்போது பல நூற்றுக்கணக்கான பொதுமக்களின் தேவையைப் பூர்த்தி செய்த குழாய்க் கிணற்றின் கைப்பம்பி பழுதடைந்து பல மாதங்கள் ஆகியும் திருத்தப்படவில்லை. இதற்குப் பொறுப்பான நிறுவனங்களோ, பிரதேச சபைகளோ கண்மூடி மௌனமாக இருக்கின்றன.

இடம் பெயர்ந்த நூற்றுக்கணக்கான மக்களுக்கு கைகொடுத்த குழாய்க் கிணறு மூலம் தண்ணீரைப் பெற்றுக்கொள்ள முடியாது மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றார்கள். பொதுக் கிணற்று நீர் மக்களுக்கு போதுமானதாக இல்லை. பல நூற்றுக்கணக்கான மக்கள் தொடர்ச்சியாகக் கிணற்று நீரைப் பயன்படுத்தும் போது வற்றி விடுகின்றது. இதனால் குடி தண்ணீரைப் பெறுவதற்கு பல மைல்கள் செல்ல வேண்டும். எனவே இடம்பெயர்ந்திருக்கும் இம்மக்கள் குடி தண்ணீரைப் பெறுவதற்கு இந்தக் குழாய்க் கிணற்றுப் பம்பிகளைத் திருத்தித் தருவதற்கு பொது நிறுவனங்கள் முன்வரவேண்டும். அடிக்கடி நூற்றுக் கணக்கான குடும்பங்கள் பயன்படுத்துவதால் பழுதடையும் இப்பம்பிகளை திருத்தி உடனுக்குடன் உதவி செய்ய பொது நிறுவனங்கள் முன்வருமா? அல்லது அரசியல் கட்சிகளாவது எமது துன்பங்களை கவனத்தில் எடுக்குமா? தயவுசெய்து இம்மக்களுக்கு எவராவது அவசியம் உதவி செய்ய முன்வருவீர்களா?

*இடம்பெயர்ந்த தென்மராட்சி மக்கள் சார்பில்*

*கரவெட்டி கிழக்கு.* **ந.சேயோன்.**

### பங்குக் குருமனையை விட்டு படையினர் விலகுவரா?

தென்பகுதியில் கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம் எவ்வளவு பிரபல்யமானதோ அந்த அளவிற்கு வடபகுதியில் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயமும் பிரபல்யமானது. ஆலயத்தின் வருடாந்த உற்சவம் ஜூன் மாதம் முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகப் போகும் இவ்வேளையில் ஆன்ம பணிகளை நெறிப்படுத்துகின்ற பங்குக்குருவரின் பணிமனையும், ஆலய வீதியும் இராணுவத்தினரின் பாவனையில் உள்ளன.

இவ்விடயம் தொடர்பாக உயர் இராணுவ அதிகாரிகளுடன் சம்பந்தப்பட்டோர் தொடர்பு கொண்ட போதும், பங்குக்குருவானவருக்கு பலன் கிடைப்பதாயுமில்லை. எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுப்பதாயுமில்லை. இது குறித்து ஈ.பி.டி.பி அமைப்பினரிடமும் முறையிடப்பட்டது. இந்நிலையில் குறிப்பிட்ட பகுதிகளிலிருந்து இராணுவத்தினர் வெளியேறினால் அன்றி திருவிழாவைக் கொண்டாட முடியாது. இம்மக்கள் சென்ற வருடம் ஆலயத்தின் 150ஆவது வருட திருவிழாவைக் கூட கொண்டாட முடியாது இடம்பெயர்ந்து ஏதிலிகளாக பல கிராமங்களில், முகாம்களில் வாழ்ந்து வந்துள்ளனர். இப்பொழுது சொந்த ஊரில் இருந்தும் இவ்வருட திருநாளை கூடக் கொண்டாட முடியாது போய்விடுமோ என மக்கள் அங்கலாய்க்கின்றனர். இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா?

*பாஷையூர்.* **ஜே.ஜேசுதாசன்.**

### நிர்வாக சேவைப் பரீட்சை வயதெல்லையைக் குறைக்குக!

06-06-1999 இல் நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவை திறந்த போட்டிப் பரீட்சையில் 151 சிங்களவர்கள் மாத்திரமே தெரிவுசெய்யப்பட்டனர். ஒரு தமிழரும் தெரிவு செய்யப்படவில்லை. பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 15/90 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் இன விகிதாசார அடிப்படையிலேயே தெரிவு மேற்கொள்ளப் பட்டிருக்க வேண்டும். இதனடிப்படையில் 25 க்கும் மேற்பட்ட தமிழர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இப்பரீட்சையில் தோற்றி கூடிய புள்ளிகள் பெற்ற தமிழ்ப்பரீட்சார்த்திகள், தமிழர்கள் நிர்வாக சேவைப் பதவிகளுக்கு தெரிவு செய்யப்பட வேண்டும் எனப்பல கோரிக்கைகளை விடுத்த போதிலும் எதுவித பலனும் கிடைக்கவில்லை. எனினும் தற்போது வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு மாத்திரமேயான நிர்வாக சேவைப் பரீட்சைக்கான வர்த்தமானி அறிவித்தலில் திறந்த போட்டிப் பரீட்சைக்கான வயதெல்லை 22 தொடக்கம் 30 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு வயதெல்லை காணப்படுவதால் 1999இல் பரீட்சைக்குத் தோற்றி பாதிக்கப்பட்டவர்கள் புதிய பரீட்சைக்குத் தோற்ற முடியாது உள்ளது.

ஆகவே வயதெல்லையை 22 தொடக்கம் 35 ஆக மாற்றி பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சையை எழுதுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தருமாறு இதனுடன் சம்பந்தப்பட்டவர்களை வேண்டுகின்றோம்.

**- பாதிக்கப்பட்ட மாணவர்கள்.**

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வேலையாள் தேவை

கோழிகள், ஆடுகள், பூந்தோட்டம் பராமரிப்பதற்கு, ஆண்கள் தேவை. தங்கியிருக்க வசதியுண்டு. தொடர்பு: தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (88324)

## இறைச்சிக்கோழி

புறொயிலர் 1Kg 140/= விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். மற்றும் லவ்பேட்ஸ் பச்சை, நீலம், மஞ்சள், வெள்ளை விற்பனைக்குண்டு. தொடர்பு:- 31,மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு). (88292)

**Broilers, Cullbirds** இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் காலை 6.30 மணிமுதல் மாலை 6.30 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (88359)

## கார் விற்பனைக்கு

**EN.** தொடர் இலக்கமுடைய **A.50** கேம்பிரிச் கார் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- **S.**அன்ரன், அளவெட்டி மேற்கு, **OR. C.L.S. JAFFNA.** (88369)

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள "ஒலிம்பியா" தமிழ் தட்டச்சு இயந்திரம் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **T.**மகாலிங்கம், 958/47, நாச்சிமார் கோயில் முன்பாக, **K.K.S.** றோட், யாழ்ப்பாணம். (88312)

## பலகை விற்பனைக்கு

முதிரை, பாலை (பலகை வகை), தராந்தி என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- கெங்கா, கே.கே.எஸ்.றோட், பூநாறி மரத்தடி. (கொக்குவில் சிவகுடில் முன்பாக) (88399)

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் யாழ்.மருத்துவ பீடத்திற்கும் இடையில், கொக்குவில் ஆடியபாதம் வீதியில் 08 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் தொடர்புகொள்க. **K.N.R**, 39, **K.K.S.** வீதி, கொக்குவில். (88404)

## ஆங்கிலக் கல்வி

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில, தபால் மூலமும் பயிலலாம். ஆசிரியர்:- ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். நாகலிங்கசுவாமிகள் வீதி, சங்கானை. (88384)

## தவறிவிட்டது

கச்சேரியைச் சேர்ந்த சுதாகர் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.702613540V) கோப்பாய்க்கும் முத்திரைச்சந்திக்கும் இடையில் **27/05/2001** ஞாயிற்றுக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 09, கச்சேரி ஒ[illegible]க, என்னும் முகவரியில் ஒப்படை[illegible]ம். சன்மானம் வழங்கப்படும். (88391)

கோண்டாவில் மேற்கு பாடசாலை வீதியைச் சேர்ந்த குணசீலன் புஸ்பராணி ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல.715184087V), விசேட அடையாள அட்டை (இல. 0902038957) ஆகியன கோண்டாவில் ஆஸ்பத்திரியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (88395)

27.05.2001 அன்று கைச்சங்கிலி ஒன்று கொக்குவில் சந்தியிலுள்ள வலம்புரி வீடியோவுக்கும் புதுக் கோயிலுக்கும் (முருகன் கோயில்) இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கருணா சைக்கிள் வேக்ஸ், மதவடி, நாச்சிமார் கோயிலடி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (88402)

இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த அருணாசலம் திலகவதி என்பவருடைய தேசிய அ.அ.(இல.665434257V), விசேட அ.அ. (இல0903021609) என்பன யாழ். ஆத்தி சூடி வீதிக்கும் யாழ்.மகளிர் கல்லூரிக்கும் இடையில் 27.05.2001 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (88410)

கொடிகாமம் ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த நாகராசா ஞானேஸ்வரி என்பவருடைய விசேட அ.அட்டை (இல.091031423) கடந்த 5.5.2001 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நா.ஞானேஸ்வரி அல்வாய் வடக்கு, அல்வாய் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம். (88408)

## வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?

எங்கும் விற்பனையாகின்றது. வேலணை ஜோதிடர் **V.A.**சிவராசா வெளியிட்டது என்று கேட்டு வாங்குங்கள். இதே படைப்பில் சனீஸ்வர, இராகு - கேது மாற்றப் பலன்களும் உள்ளன. 13.06.2001இல் வியாழன் மாற்றமடைவதன் பலாபலனை முன் கூட்டியே அறிந்துகொள்ளுங்கள். (88420)

## புத்தகங்கள் விற்பனைக்கு

எம்மிடம் பழைய புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. ஒரு வியாபார நிலையத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையான தொகையில் சகல புத்தகங்களும் கைவசம் உள்ளன. விண்ணப்பிக்கவும். விள. இல.1293, மே/பா. உதயன். (88406)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 36 வயதுடைய (03-12-1965) உத்தரட்டாதி நட்சத்திரம், கிரக பாவம் 39,பயிற்றப்பட்ட ஆசிரியைக்கு தகுந்த மணமகன் தேவை. ஜாதகக் குறிப்பு மற்றும் விவரங்களுக்கு, தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: திருமணிவாசா, கலைமன்ற வீதி, புலோலி கிழக்கு, பருத்தித்துறை. (88407)

## T.V. விற்பனைக்கு

17" **Black & White National T.V. DC, AC** விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- இல.122, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். (88418)

## படிவம்

மொறட்டுவை தொழில் நுட்ப நிறுவனத்தில் தேசிய டிப்ளோமா அனுமதி பெறுவதற்கான படிவம் விற்பனையாகிறது. நாயகபாலன், மானிப்பாய். (88419)

## தென்னங்கன்றுகள் விநியோகம்

கிளிநொச்சியில் மீளக் குடியமர்ந்து வருகின்ற மக்களுக்கு கிளிநொச்சி மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தென்னங்கன்றுகளை இலவசமாக வழங்கி வருகிறது.

குடும்பம் ஒன்றுக்கு 5 தென்னங்கன்றுகள் வீதம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இவற்றைப் பெறுவதில் மக்கள் அதிக ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் திரு.கி.பரமதாஸ் (ஆசிரியர்), திரு.கி.பாக்கியநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆசிரியை திருமதி சுகந்தி பாக்கியநாதன அவர்களின் அன்பு மாமனாரும், ஆசிரியர் திரு.ந.தர்மலிங்கம அவர்களின் அருமை மைத்துனருமாகிய

**அமரர் சிதம்பரப்பிள்ளை கிருஸ்ணபிள்ளை**

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/தேவரையாளி இந்துக்கல்லூரி

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(88422)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 10 - 08 - 1924



உதிர்வு 30 - 04 - 2001

### அமரர் கந்தையா சிவப்பிரகாசம் (N.K.S.)

*(பிரபல வர்த்தகர், சங்கானை)*

பெற்றெடுத்துப் பேணி வளர்த்து
அன்பு காட்டி அரவணைத்து
வர்த்தகராய் வாழ்ந்து
வாழ்விலே உயர்ச்சி கண்ட
எங்கள் அன்புத் தெய்வமே!
சுற்றி வருகுதையா உம் நினைவு
மறவோம் மறவோம் உன்நினைவை
என்றும் தொழுவோம் நின்பாதம்!

அமரரின் மரணச் செய்திகேட்டு எமது இல்லம் வந்து எமது துயரில் கலந்துகொண்டு, இறுதிக்கிரியைகளின் போது பல வழிகளிலும் உதவி புரிந்து எமக்கு ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறிக்கொள்வதோடு, இன்று (30.05.2001) புதன்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஆஸ்பத்திரி வீதி,*
*சங்கானை.*

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(C/16923)


## வந்துவிட்டன! விரையுங்கள்!

# அருணஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்

1) One day Cricket (Game)
2) World Cup (Game)
3) World Cricket (Game)
(1–3: For Children)
4) Table Tennis (Post) Set
5) Foot Expander
6) Power Twister
7) Chest Expander
8) Carrom Board (Champion, Medium) Boards
9) Foot Ball Mikasa No 1, No 2
10) Foot Ball Mikasa (Signature)
11) Foot Ball Mitre
12) Soft Ball Bats
13) Weight Sets
14) Bladders
15) Relay Botons
16) Nanchang (Karate)
17) Shin Pads
18) Skipping Ropes (Varieties)
19) Hats & Caps
20) Volley Ball (Train)
21) Towel Grips
22) Whistle with cord

and

*"Cricket Materials"*

**ARUNS SPORTS SPOT**

*347, Kasthuriyar Road, Jaffna.*

(C/16924)


உ

ஸ்ரீ விஸ்வேஸ்வரஸ்வாமி துணை

### இணுவில் ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் ஸமேத விஸ்வேஸ்வரஸ்வாமி தேவஸ்தானப்

பிரதம குருவான



### சிவஸ்ரீ தாணு.வாஸ"தேவக்குருக்கள்

அவர்களின் பக்திபூர்வமான வேதாகம ஆலயக் கிரியாபாக முறைகளையும், அபிஷேக அர்ச்சனா, ஆராதனை நடத்தி வைத்தமையையும் பாராட்டி இணுவில் ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் ஸமேத விஸ்வேஸ்வரர் தேவஸ்தானம் ஐயா அவர்களைக் கௌரவித்து பக்தியோடு வழங்கிய

### வாழ்த்திதழ்

வேதமொடு ஆகமங்கள் சூக்ஷ்ம ஸ்தோத்ரம்
விதிமுறையாய்ச் சிவாகமக் கிரியை யாவும்
நாதமெழு மந்திரங்கள் மதுரக் குரல்
நளினசங்கீதராக பாவத்தோடு
பூதலத்தில் பக்தியொடு பூஜை செய்யும்
பூசுரராம் வாஸ"தேவக்குருக்கள் செய்யும்
சாதகமும் போதகமும் விஸ்வ நாதர்
சால்புற மகிழ்ந்தனரே குருவேவாழி!

அஷ்டகங்கள் அருச்சனைகள் அபிஷேகங்கள்
அன்புடனே பக்தியொடு புரியும் குரு
இஷ்ட தெய்வ மான்விஸ்வ நாதருக்கு
இனியதேவ அலங்காரம் அழகாய்ச் செய்வார்
கிருஷ்ணபக்தி மிக்கவுள்ளார் வாஸ"தேவ
குருக்களவர் விசாலாட்சி விஸ்வேஸ்வரர்
சிஷ்டபெரும் ஆலயத்தின் குருக்களாவார்
சிவாச்சார்ய வாஸ"தேவக் குருக்கள் வாழி!

தேசுநிறை ப்ராஹ்மண ரூபம் தோன்றும்
தெய்வீக பக்தியொளி முகத்தில் தோன்றும்
பேசுகுரல் மதுரவள இனிமை தோன்றும்
பிரான்விஸ்வேஸ் வரர்மீது பக்தி தோன்றும்
பூசுரராம் வாஸ"தேவக் குருவும் செய்த
பெருஞ் சேவை பக்தருளம் களித்தே தோன்றும்
வீசும் அருள் விசாலாட்சி விஸ்வேஸ்வரர்
விளங்க அருள் வாஸ"தேவக் குருக்கள் வாழி!

சுபம்

கவி ஆக்கம்
"மஹா வித்துவான்"

தேவஸ்தான தர்மகர்த்தா
**சீ.பரமேஸ்வரன்**
அவர்களும் அடியார்களும்,
*இணுவில்.*

(88427)

## நன்றி நன்றி நன்றி

அன்பிற்கினிய எம் ஆசிரியத் தந்தை
அமுதகவிப் புலவர்
அமரர்



### ம.விக்ரர் (யாழ் ஜெயம்)

அவர்களின் வாழ்வுக்காகவும் பணிக்காகவும் இறைவனுக்கு நன்றிநவில்கின்றோம். இவர் பிரிவால் துயருற்றிருக்கும் அத்தனைபேரும் ஆறுதல் பெற ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

நன்றி ஆண்டவரே அவர் வாழ்வுக்காக நன்றி.

(88413) **அன்பும் பாசமுமுள்ள மாணவ குருக்கள்.**

# சென்னை மேயர் ஸ்டாலின் மீது ஒரு கோடி ரூபா ஊழல் வழக்கு!

சென்னை, மே 30

சென்னை நகர மேயரும், தி.மு.க. தலைவர் மு.கருணாநிதியின் மகனுமான மு.க. ஸ்டாலின் உட்பட இருவர் மீது சுட்டட ஒப்பந்தக்காரர் ஒருவர் ஒரு கோடி ரூபா ஊழல்முறைப்பாடு செய்ததையடுத்து பொலீஸார் வழக்குப் பதிவு! செய்துள்ளனர்.

தெய்வசிகாமணி என்ற ஒப்பந்தக்காரரே இந்த முறைப்பாட்டை தமிழக லஞ்ச ஒழிப்புப் பொலீஸாரிடம் தெரிவித்தவராவார்.

சென்னை நகரம் மற்றும் புறநகர் வீதிகளைப் பராமரிக்கும் ஒப்பந்தம் தனக்குக் கிடைப்பதற்காக மேயர் ஸ்டாலினுக்கும், அப்போது மாநில அமைச்சராக இருந்த தா. கிருட்டிணன் ஆகியோருக்கு ஒரு கோடி ரூபாவை லஞ்சமாக வழங்கியதாகத் தெய்வசிகாமணி தனது முறைப்பாட்டில் கூறியுள்ளார்.

ரமேஷ் என்பவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பரசுராமன் மூலம் ஸ்டாலினுக்குத் தன்னை அறிமுகம் செய்ததாகவும் —

அறிமுகப்படுத்தியதற்கு பிரதியுபகாரமாகப் பணம் தரும்படி கேட்டு பரசுராமன் மிரட்டியதாகவும் — தெய்வசிகாமணி கூறியுள்ளார்.

இந்த முறைப்பாடு தொடர்பாக வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்திய பொலீஸார் முன்னாள் நாடளுமன்ற உறுப்பினர் பரசுராமனை கைது செய்துள்ளனர்.

இதற்கிடையில், நேற்று சட்டசபையில் மு.க. ஸ்டாலின் பேசியபோது, தன் மீதான வழக்குகளைச் சந்திக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். (ஓ)

## பிற ஆண்களுடன் பழகியதால்

# காதலியைத் துன்புறுத்திய 100 வயது காதலன் மீது வழக்கு

மியாமி, மே 30

பிற ஆண்களுடன் தொடர்பு வைத்ததற்காக 38 வயதான தனது காதலியை சித்திரவதை செய்ததாக 100 வயதான காதலன் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது.

1901 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி பிறந்தவர் ஹெர்மன்கிலிடோ ரோஜஸ் நூறு வயதாகும் ரோஜஸின் காதலி 38 வயதான ஜேனட் அலி இவர்கள் இருவரும் மியாமியில் ரோஜஸின் வீட்டில் கடந்த 6 வருடங்களாக ஒன்றாக வசித்து வருகின்றனர்.

இந்த நிலையில் ஜேனட் பிற ஆண்களுடன் இரவு விடுதிகளுக்கு செல்வது மற்றும் வெளியிடங்களுக்குச் செல்வது என்று பொழுது போக்கினார்.

இதனால் ஆத்திரமடைந்த ரோஜஸ் ஜேனட்டின் மீது நாற்றமடிக்கும் ஒருவகை எரிபொருளை ஊற்றி துன்புறுத்தியுள்ளார். இது தொடர்பாகவே பொலீஸார் ரோஜஸ் மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர். (ஓ)

# தி.மு.க.சட்டமன்றஉறுப்பினர்மீது மேலும் இரண்டு வழக்குகள்

சென்னை, மே 30

தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் பரிதி இளம்வழுதி மீது மேலும் இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

தேர்தல் சமயத்தில் அ.தி மு கவைச் சேர்ந்த இரண்டு பேரைத் தாக்க முயற்சித்ததாக பரிதிஇளம் வழுதி மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்குகளுக்காக சென்னை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர்ப்படுத்தப்பட்டபோது, உடல் நலக்குறைவு காரணமாக தன்னை வேலூர் சிறையிலிருந்து சென்னைச் சிறைக்கு மாற்றும்படிபரிதி இளம் வழுதி கோரினார்,

அதனை நீதிபதி ஏற்றுக் கொண்டார்.

கடந்த தேர்தலில் எழும்பூர்த் தொகுதியில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அ.தி.மு.க. கூட்டணி வேட்பாளரின் ஆதரவாளரைத் தக்கிய குற்றச்சாட்டின் பேரில் பரிதி இளம் வழுதி கைது செய்யப்பட்டு ஏற்கனவே சிறையில் அடுத்து வைக்கப்பட்டுள்ளார். (ஓ-4)


உ

மாவை கொல்லங்கலட்டி

## ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் கோயில் வருடாந்த மகோற்சவம்

மேற்படி ஆலய வருடாந்த மகோற்சவம் 27-05-2001 ஞாயிறன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

03-06-2001 சப்பரத்திருவிழா
04-06-2001 தேர்த்திருவிழா
05-06-2001 தீர்த்தத்திருவிழா
06-06-2001 பிராயச்சித்த அபிஷேகமும் வைரவப் பெருமானுக்குப் பொங்கலும்.

விநாயக மெய்யடியார்கள் அனைவரும் எம்பெருமானைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெறுவீர்களாக.

ஸ்ரீலஸ்ரீ சு. சிவஷண்முகானந்தக் குருக்கள்
– அறங்காவலர்

(88400)



## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அமரர் நாகலிங்கம் கனகசபாபதி

14–05–2001 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தந்தையாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்கள், அஞ்சலி செலுத்தியவர்கள், அனுதாபம் தெரிவித்தவர்கள், சகல வழிகளிலும் பல்வேறு உதவிகள் செய்தவர்கள் யாவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (30–05–2001) புதன்கிழமை நடைபெறுகின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

– பிள்ளைகள்.

நிரந்தர முகவரி:
மீசாலை மேற்கு,
மீசாலை.

தற்காலிக முகவரி:
அரசு வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(88415)


## உதய அரங்கில்

# காஷ்மீரில் பெண் உட்பட இருவர் பலி!

ஸ்ரீநகர், மே 30

காஷ்மீரில் இரண்டு வெவ்வேறு குண்டு வெடிப்புச் சம்பவங்களில் இராணுவ அதிகாரி ஒருவரும், ஒரு பெண்ணும் கொல்லப்பட்டனர்.

4 சிறுவர்கள் உட்படப் 10 பேர் காயமடைந்த இந்தக் குண்டு வெடிப்புகளுக்கு காஷ்மீர்த் தீவிரவாதிகளே காரணம் என்று இந்திய இராணுவம் கூறியது.

## இஸ்ரேல் அரசின் ஏற்பாட்டில்

# ஜெருசலேத்தில்ஆலயம்கட்டுவது உலகப் போருக்கு வழி வகுக்கும்

## எகிப்திய மதத் தலைவர் எச்சரிக்கை

கெய்ரோ, மே 30

இஸ்ரேல் ஜெருசலேத்தில் புதிய ஆலயத்தைக் கட்டினால் அது மூன்றாம் உலகப் போருக்கு வழி வகுக்கும்.

இவ்வாறு எகிப்தின் மதிப்புக்குரிய இஸ்லாமிய மதத் தலைவர் முப்தி ஷேக்நாஸர் பரீத் வாசல் எச்சரித்துள்ளார்.

இஸ்லாமியர்களின் மூன்றாவது புனிதத் தலமாகக் கருதப்படும் ஹரம் ஷெரீபில் இஸ்ரேலிய அரசு ஆலயம் கட்டுவதை இஸ்லாமிய நாடுகளும், அவற்றின் மக்களும் அனுமதிக்கமாட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

ஜெருசலேத்தில் உள்ள ஹரம் ஷெரீப் புனிதவளாகம், இஸ்ரேலியர்களுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையே பதற்றமான பிரச்சினையாகும் என்றும் முப்தி ஷேக் நாஸர் பரீத் வாசல் தெரிவித்தார்.

இரு தரப்பினருக்கும் புனித தலமான ஹரம் ஷெரீபில் இஸ்ரேலியர்கள் தமது மத வழிபாட்டுத் தலமொன்றைக் கட்ட முயற்சி எடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

## கட்சி அனுமதி அளிக்காத போதும்

# மணிப்பூரில் அரசு அமைக்க பா.ஜ.க. சபாநாயகர் முயற்சி

இம்பால், மே 30

இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தில் புதிய அரசை அமைக்கச் சட்டசபைச் சபாநாயகர் எஸ். தனஞ்ஜெயன் உரிமை கோரியுள்ளார்.

தம்மை ஆதரிக்கும் முற்போக்கு ஜனநாயகக் கூட்டணியின் 40 உறுப்பினர்களின் பட்டியலை நேற்று முன்தினம் அவர் ஆளுநரிடம் சமர்ப்பித்தார்.

மணிப்பூர் சட்டசபையில் சமதாகட்சி அரசு நடத்திய நம்பிக்கை வாக்கெடுப்பில் அதன் தோழமைக் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியின் உறுப்பினர்கள் கட்சிக் கட்டளையை மீறி அரசை எதிர்த்து வாக்களித்ததால் அந்த அரசு கவிழ்ந்தது.

கடந்த வாரம் சமதா அரசு கவிழ்ந்த பின்னர் ஆட்சி அமைக்க உரிமை கோரப் பாரதீய ஜனதா தனது உறுப்பினர்களுக்கு அனுமதி அளிக்காததால் மணிப்பூரில் புதிய அரசமைப்பதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

ஆட்சியமைக்க கட்சி அனுமதி அளிக்காத போதும் இப்போது பாரதீய ஜனதாவைச் சேர்ந்த சபாநாயகர் தனஞ்ஜெயன் புதிய அரசை அமைக்க முன்வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

## சென்னை உயர் நீதிமன்றத்தில்

# ஜெயலலிதா முதலமைச்சராக செயற்படுவதைத் தடுக்க மனு

## சுப்பிரமணியசுவாமி தாக்கல்

சென்னை, மே 30

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை, அவரது பதவியில் செயற்படுவதைத் தடுக்க உத்தரவிடுமாறு சென்னை உயர்நீதிமன்றத்தில், ஜனதாக்கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி மனு தாக்கல் செய்துள்ளார்.

சட்டப் பேரவை உறுப்பினராவதற்குத் தகுதி அற்ற ஒருவரை முதலமைச்சராக நியமிக்கக் கூடாது என்ற அடிப்படையில் உத்தரவைப் பிறப்பிக்குமாறு சுப்பிரமணிய சுவாமி தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் சுயாட்சி உரிமை மற்றும் சட்டவிதிகளைப் பாதுகாக்கும் அரசமைப்பு விதியின் கீழ் லஞ்ச ஊழல் குற்றஞ்சாட்டப்பட்ட ஜெயலலிதா சட்டப்பேரவை உறுப்பினராவதிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டதாக மனுவில் கூறப்பட்டுள்ளது. (ஓ-4)

## 'ஐரோப்பியத் தேசியம்' தொடர்பான

# ஜேர்மனியின் திட்டத்தை பிரான்ஸ் அரசு நிராகரிப்பு

பரீஸ், மே 30

ஐரோப்பியத் தேசியம் ஒன்றை உருவாக்கி அதிக அதிகாரங்கள் கொண்ட நாடாக ஐரோப்பாவை உருவாக்கும் ஜேர்மனியின் யோசனையைப் பிரான்ஸ் அதிபர் ஜொஸ்பின் நிராகரித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அமைச்சர்கள் குழுவை, ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் அமைச்சரவையாகத் தரமுயர்த்தி, அரசு ஒன்றை அமைக்க வேண்டும் என்று ஜேர்மனி அதிபர் எரால்ட் ஸ்குருடன் யோசனை தெரிவித்திருந்தார்,

ஐரோப்பிய நாடுகள் பலவும் ஏற்கனவே இந்த யோசனையை நிராகரித்திருந்தன. இதுவரை கருத்து வெளியிடாமல் இருந்த பிரான்ஸ் அதிபர் ஜொஸ்பின், தற்போது 'ஐரோப்பிய நாடு' யோசனையை நிராகரித்துள்ளார்.

ஆனால் ஐரோப்பிய நாடுகளுக்குப் பொதுவான பொருளாதார அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கு அவர் ஆதரவு தெரிவித்தார்.

இத்தேசப் ஐரோப்பியத் தேசியம் குறித்த யோசனையை பிரிட்டன் கவனத்தில் எடுத்துக் கொண்டிருப்பதாகவும் - நடைபெற உள்ள பொதுத்தேர்தலில் இந்தவிவகாரம் முக்கிய விடயமாகியிருப்பதாகவும் - அவதானிகள் கூறியுள்ளனர். (ஓ)

# சேகுவாராவை படம் எடுத்தவர் காலமானார்

உலகப் புகழ் பெற்ற கியூப புகைப்படப் பிடிப்பாளர் அல்பேர்டோ கோர்டா கடந்த வெள்ளிக்கிழமை பிரான்ஸில் தனது 73 ஆவது வயதில் காலமானார்.

மகத்தான கெரில்லாப் போராளி சேகுவராவை சிருடையுடன் கோர்டா எடுத்த மார்பளவுப் படம், உலகில் புரட்சி வாதிகளால் 'புனித சிலை' போன்று இன்று கருதுவது குறிப்பிடத்தக்கது. (ஓ)

# முஷாரப்புடன் குரியத் பேச அனுமதி மறுப்பு

பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப்பின் இந்தியப் பயணத்தின் போது, காஷ்மீர் குரியத் மாநாடு கட்சித் தலைவர்களுக்கும், அவருக்கும் இடையே பேச்சு நடைபெறாது என்று இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த்சிங் தெரிவித்தார்.

பிரதமர் வாஜ்பாயின் அழைப்பை ஏற்றே முஷாரப் வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திரு. திருமதி துரைசிங்கம்

(அச்சுவேலி மத்திய கல்லூரி)
ஆகியோரின்
25 ஆவது ஆண்டு திருமண நிறைவையும்
திருமதி பே. துரைசிங்கம் அவர்கள்
ஆசிரியர் தரம் I க்குப் பதவி உயர்வு பெற்றமையையும்
இனிதே மன நிறைவுடன்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மாணிக்கவாசகர் குடும்பம்,
சிதம்பரப்பிள்ளை குடும்பம்,
சிவசாமி குடும்பம்.

(88443)

## கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்

உதவிப் பணிப்பாளர் (வடக்கு)
பணிமனை இயங்குவதற்கான கட்டடம் (வீடு)
கொள்வனவு செய்வதற்கான

# கேள்விப் பத்திரங்கள் கோரல்

மேற்படி அலுவலகம் இயங்குவதற்கு உகந்த கட்டடம் ஒன்றை விற்பனை செய்யக் கூடியவர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கட்டடம் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமையவிருத்தல் வேண்டும்.

அ) இப்பணிமனை இயங்குவதற்கு குறைந்தது 3 அறைகள் உட்பட தேவையான விசாலமான இடப் பரப்பைக் கொண்டிருக்க வேண்டும்.

ஆ) அடிப்படை வசதிகளான நீர், மின்சாரம் வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

இ) இக்கட்டடம் யாழ். நகரிலிருந்து 1 கிலோ மீற்றர் தூரத்தினுள் மானிப்பாய் வீதி, காங்கேசன்துறை வீதி, நாவலர் வீதி, பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி, பலாலி வீதி அல்லது இவ்வீதிகளுக்கிடையில் அமைந்த குறுக்கு வீதிகளில் அமைந்திருத்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் யாவும் கட்டட உரிமையாளரிடமிருந்து 15.06.2001 ஆம் திகதிக்கு முன்னராக உதவிப் பணிப்பாளர் (வடக்கு) அலுவலகம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், இல. 180, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்கப்பட வேண்டும். கட்டடத்தின் அமைவிடம், வசதிகள், கட்டடம் அமைந்த காணியின் பரப்பளவு, கட்டடப் பெறுமதி மற்றும் ஏனைய நிபந்தனைகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அனுப்பவும்.

உதவிப் பணிப்பாளர் / வடக்கு,
கால்நடை உற்பத்திசுகாதாரத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

(சி/16925)

## கண்ணீர்ப் பூக்களை

# காணிக்கையாக்குகின்றோம்

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்கான
அபிவிருத்தித் தொண்டர்

## ஞானசீலன் அன்ரன் ஜெராட்

அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மசாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அபிவிருத்தி இணைப்பாளர்,
பரிசோதகர்கள், போதனாசிரியர்கள்,
அபிவிருத்தித் தொண்டர்கள்,
வேலணை பிரதேச செயலர் பிரிவு.

(88437)

# துயர் பகிர்கின்றோம்

பச்சிலைப்பள்ளி
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்

சி. சுந்தரலிங்கம்
அவர்களின் பாசமிகு தாயார்

## சின்னத்துரை பொன்னாச்சி

அவர்களின் பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நா. முருகையா குடும்பம்
(முகமாலை)
தா. சிவநாதன் குடும்பம்
(சுவிஸ்)

தற்காலிக முகவரி:-
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

(சி/16931)

## இராஜவீதியூடாக யாழ் - அச்சுவேலி பஸ் சேவை

இராஜ வீதியூடான யாழ்ப்பாணம் — அச்சுவேலி பஸ் சேவை முதலாம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் வட பிராந்தியப் போக்குவரத்துச் சபையினால் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பாதை இலக்கம் 986 ஐ உடைய இந்தப் பஸ்சேவை ஆரம்பிக்கப்படுவதையிட்டு பொதுமக்களுக்கு அறியத் தருவதாக வட பிராந்தியப் போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (க-10)

## அபிவிருத்தி தொண்டர் நேர்முக பரீட்சை

வலி.மேற்குப் பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட அபிவிருத்தித் தொண்டர்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வலி.மேற்கு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் கல்வித்தகைமைசான்றிதழ் அடையாள அட்டை ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (க-29)

## சமய சந்நிதிகளில்

உரும்பிராய் கூழாவடி காட்டு வைரவர் ஆலய சங்காபிஷேகம் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். சுவாமி வீதியுலா வருவார், அன்னதானமும் வழங்கப்படும். (ஐ)

★ ★ ★

அராலி, ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் முதலாம் திகதிவெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 9 தினங்கள் நடைபெறவுள்ளது. (க-10)

★ ★ ★

சுன்னாகம் புனித அந்தோனியார் தேவாலத்தின் வருடாந்தக் கொடியேற்ற விழா எதிர்வரும் 4ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

12 ஆம் திகதி நற்கருணை வழிபாடும் 13 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும். (ஐ-172)

★ ★ ★

கோப்பாய் தெற்கு புனித மரியாள் ஆலய வருடாந்தத் திருநாள் வழிபாடுகள் கடந்த 22 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இன்றுபுதன்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை ஆராதனையும், பவனியும் நடைபெறும்.

நாளை வியாழன் காலை 7 மணிக்கு புனித மரியாள் பெருவிழாத் திருப்பலியும் திருச்சொரூபப் பவனியும் ஆசிரும் இடம்பெறும். (ஐ)

★ ★ ★

துன்னாலை வடக்கு அல்லையம்பதி ஸ்ரீசிவசுப்பிரமணியசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் கடந்த 26 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்துபத்துத்தினங்கள் நடைபெறும் இம் மஹோற்சவத்தின் இரதோற்சவம் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், தீர்த்தோற்சவம் மறு நாள் 4 ஆம் திகதி திங்கட்கிழமையும் நடைபெறும். (ஐ-173)

★ ★ ★

தென்புலோலி புற்றளை அருள்மிகு ஸ்ரீசித்தி விநாயகர் கோயில் மணவாளக்கோல உற்சவமும் சங்காபிஷேகமும் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும், (ஐ-173)

## கொக்குவில் இந்துக்கல்லூரி

பழைய மாணவர் சங்க

# வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம்:-
கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபம்
காலம்:- 08-07-2001 ஞாயிற்றுக்கிழமை
நேரம்:- மு.ப. 9.30 மணி

எமது பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் எல்லோரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

குறிப்பு:

i பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் 24 - 06 - 2001 ஆம் திகதிக்கு முன்பாக செயலாளரிடம் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

ii பழைய மாணவர் சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புபவர்கள் கல்லூரி அலுவலகத்தில் அல்லது செயலாளர் அல்லது பொருளாளருடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டிக்கொள்கின்றோம்.

இ. செல்வநாதன்
செயலாளர் கொ. இ. கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்.

(சி/16926)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னத்திரேசா ஜோசவ்அருமைநாயகம்

(இளைப்பாறிய ஆசிரியை)

சூராவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்திரேசா ஜோசவ் அருமைநாயசம் நேற்று (29-05-2001) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இளைப்பாறிய அதிபரான ஜோசவ் அருமைநாயகத்தின் அன்பு மனைவியும் திருமதி ஜெயசீலி கருணைநாயகம், மரியநாயகம், ஜெயநாயகம் (Patrician Institute) ஆகியோரின் அன்புத் தாயாரும், கருணைநாயகம் (ஆசிரியர், St Johns College) திருமதி கொன்சி ஜெயநாயகம் (ஆசிரியை, சில்லாலை றோ. க. த. க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெனிற்றா (ஆசிரியை, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), யூட், அலன், விஜி, றிவி, டனுஷன், டனுஷினி, டனுகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (30—5—2001) இன்று புதன்கிழமை மாலை 3-00 மணி (புதியநேரம்) அளவில் நடைபெற்று புனித திரேசாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் பூதவுடல் ஏழாலை கத்தோலிக்க சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்,

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்:
J. C. ஜெயநாயகம்
(மகன்)

சூராவத்தை,
சுன்னாகம்,

(88439)

## திருமதி மார்க்கண்டு தங்கரத்தினம்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் மல்லாகம் நீதிமன்ற வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மார்க்கண்டு தங்கரத்தினம் 27 - 05 - 2001 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன இளைப்பாறிய ஊழியர் அமரர் கந்தையா மார்க்கண்டு அவர்களின் அருமை மனைவியும் குரும்பசிட்டி காலஞ்சென்ற கோவிந்தசாமி—பூரணம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், தங்கராசா (வல்வெட்டி), இரஞ்சிதமலர் (கனடா), பரராசசிங்கம் (மல்லாகம்), துரைசிங்கம் (கனடா), வசந்தமாலா (கனடா), ஜெயசிங்கம் (பிரான்ஸ்), விஜயசிங்கம் (லண்டன்), நிமலசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சரோஜினிதேவி, கனகசபை, புவனேஸ்வரி, நகுலேஸ்வரி (மாலா), கருணானந்தன், தயாவதி, சுகிப்தவதி, றூபி ஆகியோரின் அன்பு மாமியாரும் தயந்தன், ஜெனகன், டக்ஷாயினி, பிரணவன், சரவணஸ், நீபன், சர்மிலன், பிரமிலன், அமிலன், கலைவாணி, ஜசிகலா, ஜெலக்ஷன், ஜெதூஷா, கிருஷ்ணி, ஜஷ்ணி, அபிமன்யு, செல்மினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (28 - 05 - 2001) திங்கட்கிழமை மல்லாகத்தில் நடைபெற்று பூதவுடல் குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
மா. பரராசசிங்கம்

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

(சி/16630)

## நெஞ்சை விட்டகலாத முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 03 . 12 . 1946



அரன் அடியில் 09 . 06 . 2000

### அமரர் நாகலிங்கம் சிவசோதி
**(S.L.P.S I அதிபர், யா/மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தி.)**

கர்மவீரன் எங்கள் காந்தி மறைந்ததெங்கே?
கண்ணிமைக்கும் நேரத்தில் காலன்செய்த கொடுமையையா!
அழிந்தது உடலம்தான் அழியாதது என்றும் சோதி!
ஆத்ம சாந்திக்காய் அமலனை இறைஞ்சுகின்றோம்!

வதிரி, கரவெட்டி. (88442)

- ஆசிரியர், மாணவர்கள். யா/சந்திரமௌலீச வித்தி, சாவகச்சேரி.


## அஞ்சலி நிகழ்வு இன்று ஒலிபரப்பு

யாழ்ப்பாணம்,மே30

கவிஞர் யாழ்.ஜெயத்தின் இறுதி அஞ்சலி நிகழ்வு குறித்த தொகுப்பு நிகழ்ச்சி ஒன்று இன்று இரவு 10 மணிக்கு யாழ். சேவையில் ஒலிபரப்புச் செய்யப்படவுள்ளது.

யாழ்.திருமறைக் கலாமன்றத்தில் நடைபெற்ற இறுதி அஞ்சலி நிகழ்வுகளே இவ்வாறு ஒலிபரப்புச் செய்யப்படவுள்ளன.

பேராசிரியர் அசண்முகதாஸ், கலாநிதி எஸ்சிவலிங்கராசா, கலாநிதி எஸ். சண்முகலிங்கன் ஆகியோர் நிகழ்த்திய அஞ்சலியுரைகளும் இடம்பெறும்.


## நன்றி நவில்கின்றோம்



வன்னிப்பகுதிக்கு நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் வெளிமாவட்டத் துக்குச் செல்வதற்கான போக்குவரத்து மார்க்கங்களுக்கான அனுமதிபெறும் கெடுபிடிகளாலும், வழங்கப்படும் படி, வெளி மாவட்டங்களில் தமது ஜீவனோபாயத்தைச் சமாளிக்கப் போதாத காரணத்தாலும் வன்னிக்குச்செல்ல விரும்பாததாலும் அவர்களுக்கு யாழ். மாவட்டத்தில் இடமாற்றம் பெற்றுத் தந்தமைக்காக யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா சு. கட்சி அமைப்பாளர் வேல்முருகு தங்கராஜா அவர்களுக்கும் ஸ்ரீலங்கா சு. கட்சிக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*வெளிமாவட்டத்திற்கு நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள்.*

(88436)



## ராஜா
யாழ்ப்பாணம்

அஜித், சிம்ரன் மற்றும் பலர் நடித்த
**உன்னைக் கொடு என்னைத் தருவேன்**

காட்சிகள் தினசரி : 10.30, 2.30 (புதியநேரம்)
சனி, ஞாயிறுகளில் :10.30, 2.00, 5.00 (புதி.)

01-06-2001 முதல்
விஜயகாந்த் நடித்த
*சிம்மாசனம்*



## 1st in Com, G.A.Q யாழ், பேராதனை
(வெளிவாரி)

இவற்றுக்குரிய பதிவுகள் பல்கலைக்கழகங்களில் கோரப்பட்டுள்ளது. A/L இல் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் இவற்றில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் இவற்றுக்குத் தகுதி உடையவர்கள் ஆவர். இவற்றுக்குரிய பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

இவற்றுக்குரிய புதிய பிரிவு விரிவுரைகள்

*ஆரம்பம்:–* 02.06.2001 காலை 8 மணி

**புதிய உயர் கல்லூரி**
*ஆரியகுளம், யாழ்.*

நிர்வாகி
**S.அருள்நங்கை**

(88414)



உ

## காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்பாள் கோயில்
# தேர்முட்டி அத்திவாரமிடல் விஞ்ஞாபனம்

*காலம்:* விஷு வருடம் வைகாசி மாதம் 18ஆம் நாள் 01-06-2001 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.33 மணி தொடக்கம் 1.01 மணி வரையுள்ள சிங்கலக்கின சுப முகூர்த்தத்தில் வைபவம் நடைபெறும்.

*முற்பகல்* 9.00 மணி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகம்
*நண்பகல்* 11.00 மணி உச்சிக்கால விசேட பூசை
11.30 மணி வசந்த மண்டபப் பூசை திருவூஞ்சல்
12.33 மணி தேர் முட்டி அத்திவாரமிடும் நிகழ்வு

அதைத் தொடர்ந்து அம்பாள் வீதி உலா, மகேஸ்வர பூசை, பிரசாதம் வழங்கல் என்பன நடைபெறும்.

1. தேவஸ்தான குரு
*சிவஸ்ரீ நா.ஞானசம்பந்தக்குருக்கள் -காரைநகர்*
2. *சிவஸ்ரீ சோ.கௌரீஸ்வரக்குருக்கள்- நவாலி*

*வே.நடராசா, கோயில் பெறுநர்.*

வை.கா.தவராசன்
செயலாளர்
தேர்த் திருப்பணிச் சபை



## நாகம்ஸ்
சுன்னாகம்

சத்தியராஜ், குஷ்பு, கபாலி நடித்த
**உன்னைக் கண் தேடுதே**
(ரீலீஸ்)
தினசரி: 11.00, 3.30 (புதிய நேரம்)



## லஷ்சுமி
இணுவில்

*அஜித் ,லைலா*
மற்றும் பலர் நடிப்பில்
**தீனா**
(ரீலீஸ்)
காட்சிகள் தினசரி 10.30, 2.30 (புதி.)
சனி, ஞாயிறுகளில்
10.30, 2.00, 5.00 (புதியநேரம்)


## மரண அறிவித்தல்

### ஜோண் அருளானந்தம் (கோசி)
*(பிரபல கட்டட ஒப்பந்தக்காரர்)*

மருதடி வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜோண் அருளானந்தம் (கோசி) 28.05.2001 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோண் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் லில்லிமணியின் அன்புக் கணவரும்,காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை மற்றும் யோகம்மா, திரேசம்மா, செல்லையா காலஞ்சென்ற யோசேப் மணி (பிரபல கட்டட ஒப்பந்தக்காரர்) மற்றும் பெனடிக்றபாலன் (பிரபல எழுத்தாளர், கல்விப் பணிப்பாளர், கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற றஞ்சித் மற்றும் யூலியற்றஞ்சினி (கனடா), அன்ரனீற்றா காலஞ்சென்ற யூலியற் ஜமிலா மற்றும் அடைக்கலதாசன் (ஜேர்மனி), அன்ரன் (கொழும்பு), யேசுதாசன், அமலதாசன், யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2001) புதன்கிழமை 3.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*யாழ்ப்பாணம்.* (88431)

தகவல்:
லில்லிமணி (மனைவி)


தில்லையம்பதியாள் துணை

**மாமர நிழல்தனிலே வந்தேயமர்ந்த தாயே!
தாமரைப் பாதமலர் தருவாய் துணை நீயே
சோமசுந்தரன் நட ராஜன் மனோஹரியே
ஆரணி பூரணியே ஆனந்த பைரவியே**



## இன்று தில்லையம்பதியில் நான்காம் திருவிழா

மங்கள இசை:
கலாசூரி என்.கே. பத்மநாதன் குழுவினர்

**இரவு 07.30 மணிக்கு பட்டிமன்றம்**

**ஒருவனுடைய புகழுக்கும், பெருமைக்கும் காரணமாக அமைபவள் தாயா? தாரமா?**

நடுவர்- திரு. கோகலை (ஆசிரியர்)

தாய்
திரு. பாலமுரளி (ஆசிரியர்)
திரு. சிவஞானம் (ஆசிரியர்)
திரு. குமார்

தாரம்
திரு. அப்பன் மாஸ்ரர்
திரு. பிரதீபன்
திரு. தர்மசோதி

திருக்கோயில் பரிபாலனசபையினரும், உபயகாரர்களும்.

விளம்பர அன்பளிப்பு:
# குகன் போட்டோ

உங்கள் மங்களகரமான நிகழ்வுகளை பற்பல வடிவங்களில், திறம்பட படம் பிடித்திட நாடவேண்டிய ஒரே நிறுவனம் குகன் போட்டோ.

தில்லையம்பதி, கோண்டாவில்.

NANTHA Graphics (NG) Nallur



## கைகொடுத்தல்

"கைகொடுத்தல் நிதி" திட்டத்தின் கீழ் காணாமல் போனவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த, கல்வி கற்கும் 80 சிறுவர்களுக்கும் 41 மாணவர்களுக்கும் நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

பிரதம விருந்தினர்:
பேராசிரியர்.பொ.பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர்,யாழ்.பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்;
திரு.மா.நடராஜசுந்தரம்.
(பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம், யாழ்.பல்கலைக்கழகம்.)

காலம்: 30.05.2001 புதன்கிழமை
நேரம்: பிற்பகல் 2 மணி



இடம்: கைலாசபதி கலையரங்கம்,யாழ் பல்கலைக்கழகம்.

சிறப்பு நிகழ்வுகள்
உயிர்விசை அக்கினிப்பெருமூச்சு
(நாடக ஆற்றுகைகள்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவர் ஒன்றியம், யாழ்.பல்கலைக்கழகம். (88412)

# வன்னிக்குப் புறப்பட்ட 300 பேர் நேற்று திருப்பி விடப்பட்டனர்!

## நீண்ட காலத்தின் பின்னர் ஏமாற்றம்

வவுனியா,மே30

வவுனியாவில் இருந்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதிக்குப் புறப்பட்டுச் சென்ற சுமார் 300 பேர் பிரமணாளங்குளத்தில் வைத்து படையினரால் மீண்டும் வவுனியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

வன்னிப்பகுதியில் இருந்து பொருளகளைக் கொள்வனவு செய்வதற்காக வவுனியாவுக்கு வந்தவர்களே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டமைக்குக் காரணம் எதுவும் கூறப்படவில்லை என வவுனியாச் செய்திகள் தெரிவித்தன.

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் இவ்வாறு பயணிகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

வாரத்தில் செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகிய இரு தினங்களில் மட்டுமே வன்னிப்பகுதிக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(க-7)

## பேச்சு வேண்டாம்; யுத்தம் மூலமே தீர்வு:

# சிஹல உறுமய தயாரிக்கும் மகஜரில் கையொப்பமிட மல்வத்த பீடாதிபதி மறுப்பு

கொழும்பு,மே30

விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் சமாதான முயற்சிகளில் ஈடுபடக் கூடாது; யுத்தத்தின் மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி பத்து லட்சம் பௌத்தர்களின் ஒப்பங்களைப் பெற 'சிஹல உறுமய' கட்சி எடுத்த முயற்சிகளுக்கு ஆதரவு தர மல்வத்தை பீடாதிபதி மறுத்துவிட்டார்.

இது விடயத்தில் நாடெங்கிலும் உள்ள பத்து லட்சம் பௌத்த சிங்களவர்களின் ஆதரவைப் பெற்று, அவர்களின் ஒப்பங்களுடன் மகஜர் ஒன்றை அரசுக்கு அனுப்புவதற்கு 'சிஹல உறுமய' முடிவுசெய்திருக்கின்றது.

இந்த முயற்சியின் ஆரம்ப நடவடிக்கையாக மகஜரில் மல்வத்தை பீடாதிபதி ஸ்ரீ ரம்புக்வெல விபஸி தேரரின் ஒப்பத்தைப் பெறுவதற்கென 'சிஹல உறுமய'வின் தேசிய அமைப்பாளரும் எம்.பியுமான சம்பிக்க ரணவக்க தலைமையில் குழு ஒன்று நேற்று கண்டிக்குச் சென்றது. பீடாதிபதியைச் சந்தித்து ஆதரவு தரக் கோரியது.

ஆனால் பௌத்த மகாசபை ஒன்றுகூடி இது தொடர்பாக தீர்மானம் ஒன்றை எடுக்காதவரை தம்மால் மகஜரில் ஒப்பம் இடமுடியாது என்று பீடாதிபதி பதிலளித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-9)

## தீர்வு காணும் வேளை வந்துவிட்டது!

# அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மங்கள ரணிலுக்கு அழைப்பு

கொழும்பு,மே30

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஒத்துழைப்பு வழங்குமாறு நகர அபிவிருத்தி அமைச்சர் மங்கள சமரவீர எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

பிரச்சினைகளுக்கு முடிவு கட்ட வேண்டிய சமயம் நெருங்கிவிட்டது. அதனால் அரசுக்கு எதிர்க்கட்சி பூரண ஆதரவை வழங்கவேண்டும் என்றும் மங்கள சமரவீர கோரிக்கை விடுத்துள்ளார்.

திங்கட்கிழமை மாலை கொழும்பில் உலக வர்த்தக சந்தைக் கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டுவைத்த பின்னர் உரையாற்றிய அமைச்சர் 2006 ஆம் ஆண்டில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமருக்கான தேர்தலில் போட்டியிடுவார் என்றும் குறிப்பிட்டார்.

(க-9)


சுடர் ஒளி

03.06.2001

- அரசு முடிவை மீளாய்வு செய்ய புலிகள் கோரிக்கை
- அரசாங்கத்தின் முடிவு ஐ.தே.கவுக்கு விடிவு
- கிழக்கை நோக்கி விரியும் யுத்தம்!
- யுத்தநிறுத்தம், சமாதானம் கோரி தமிழ் ஆசிரியர் விடுதலைப் பேரணி
- ஆஞ்சநேயர் வழிபாடா? சைவத்தில் அறவே இடமில்லை! சிவத்தமிழ்ச் செல்வியே அதற்கு முண்டுகொடுத்து சிவத்துரோகம் செய்வதா?
- யாழ். ஆஸ்பத்திரிப் பணிப்பாளருடன் ஈ.பி.டி.பியினர் கொழுவல்! பதவி விலகுவதாக அம்மணி முன்னறிவித்தல்.
- இன்னொரு இந்திய ஆக்கிரமிப்பு; குடாநாடு முழுவதும் பாதிப்பு
- கதிர்காம முருகன் ஆலயத்தில் சமயச் சிதைவு; தமிழ்க் கொலை
- சந்திரிகா 2006 இலும் போட்டி என்பது நோட்டம் விடும் பேச்சா?

மற்றும்

முத்தமிடும் ரோஜா இதழ்கள் தொடர்கதை, சிறுகதை, ஆந்தையாரின் க்ரைம் டயறி, அரசியல் அம்பலம், விளையாட்டு, தேரடி அரட்டை உட்பட
பல்வேறு சுவையான அம்சங்கள்.



BIT → IIS

சந்தர்ப்பத்தினைத் தவறவிடாதீர்கள்!

கணனித்துறையில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாகக் கூடிய அரிய சந்தர்ப்பத்தினைத் தவறவிடாதீர்கள்!

உங்கள் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிநாள் 01.06.2001மாலை 4.00 மணி வரை மட்டுமே!

※ தேர்வுப் பரீட்சைக்கான முன்னோடி வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன!

மேலதிக விவரங்களுக்கு:
இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்.

(C/16929)


## மணலாறில் இரு புலிகள் உயிரிழப்பு

வவுனியா,மே30

மணலாறு சிலோன் தியேட்டருக்கு அருகில் கடந்த திங்களன்று எதிர்பாராதவிதமாக இடம்பெற்ற மோதலில் தமது தரப்பில் இருவர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

லெப்.பிரபாலினி (வீரசிங்கம் வச... மட்டக்களப்பு), லெப்முல்லை (யோ... தன் பத்மாவதி - மட்டக்களப்பு) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்தவர்களாவர்.

(க-7)

## காலை நேரத்தில் இயங்கும் முகாவில் அ.த.க.பாடசாலை

தென்மராட்சி,மே30

பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் மாலை நேரப் பாடசாலையாக இயங்கி வந்த முகாவில் அ.த.க. பாடசாலை கடந்த செவ்வாய்க்கிழமை முதல் பருத்தித்துறை ஓராங்கட்டையடியிலுள்ள தனியார் கல்வி நிலையத்தில் காலை நேரப் பாடசாலையாக இயங்கி வருவதாக பாடசாலை அதிபர் வீ.ஜீவரெத்தினம் தெரிவித்தார்.

வடமராட்சிப் பிரதேசத்தில் தற்போது இரு பாடசாலைகள் மட்டுமே மாலைநேரப் பாடசாலைகளாக இயங்கி வருகின்றன.

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்திலும், விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம் கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரியிலும் மாலை நேரப் பாடசாலைகளாக இயங்கி வருவதாக வலயக் கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(க-117)

---

## நகரில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லும் மேற்கொண்ட நடவடிக்கைகள் இதுவரை எதுவித பலனும் அளிக்கவில்லை.

எனவே எமது நிர்வாக சபையின் தீர்மானத்துக்கு அமைய இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிவரை சகல வர்த்தக நிறுவனங்களையும் பூட்டி எமது ஆதங்கத்தை வெளிப்படுத்த உள்ளோம்.

எனவே யாழ்.வர்த்தகர்கள் அனைவரும் தமது வர்த்தக நிறுவனங்களை இன்று முற்பகல் 11 மணிவரை மூடி, தங்களின் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு வேண்டுகின்றோம் - என்று அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

யாழ்ப்பாணம், நல்லூர், பருத்தித்துறை, புலோலி, நெல்லியடி, சுன்னாகம், மருதனார்மடம், இணுவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வர்த்தகர்களும் இன்று கடைகளைப் பூட்டி உதவிப் பொதுமுகாமையாளரின் இடமாற்றத்துக்கு தமது ஆட்சேபனையைத் தெரிவிக்கவுள்ளனர்.

இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம், ஏழாலைமேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை மற்றும் சில பொது அமைப்புகளும் ஸ்தாபனங்களும் கூட உதவிப் பொதுமுகாமையாளரின் இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு கோரியுள்ளன. (க-7-5)


எமது நேற்றைய வீடியோ CD வெளியீடு

சொன்னால் தான் காதலா?

வீடியோ விமல்

யாழ்ப்பாணம். (C/16936)



※ புதிதாகச் சேர விரும்பும் மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்பு!
※ ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.

A/L 2003

LOGIC

எஸ். எஸ். மனோகரன்

ஆரம்பம்: 02-06-2001 சனி 9மணி

BEACON

(88416) யாழ்நகர்


## பல்கலைக்கழக மாணவருக்கு ஆதரவாக:

# கொழும்பில் பிக்குமார் இன்று சத்தியாக்கிரகப் போராட்டம்

கொழும்பு,மே30

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் அண்மையில் நடத்திய ஊர்வலத்தை களனிப் பாலத்துக்கு சமீபமாக வைத்துப் பொலிஸார் கணணீர்ப் புகைக்குண்டு வீசி, தாக்கிக் கலைத்ததை ஆட்சேபித்து சுமார் ஐயாயிரம் பௌத்த பிக்குகள்-

இன்று காலை 9 மணி முதல் கொழும்பு விகாரமாதேவி பூங்கா முன்பாக சத்தியாக்கிரகத்தில் ஈடுபடவிருக்கின்றனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்கள் தனியார்மயப்படுத்தப்படுவதை ஆட்சேபித்து பல்கலைக்கழக மாணவர்கள் நடத்த முற்பட்ட ஊர்வலமே பொலிஸாரால் அடித்துக் குழப்பப்பட்டது என்பது தெரிந்ததே.

(உ)

## பிரதம நீதியரசருக்கு எதிராக பிரேரணை

# ஐ.தே.கவின் முக்கிய புள்ளிகள் ஒப்பமிட அடியோடு மறுப்பு

கொழும்பு,மே30

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத்தில் கொண்டு வரவிருக்கும் குற்ற விசாரணைப் பிரேரணையில் ஐக்கிய தேசியக் கட்சியின் - சட்டத்துறை சார்ந்த பிரமுகர்களான - எம்.பிக்களும், சில மூத்த தலைவர்களும் ஒப்பமிடவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் சட்டமா அதிபர் திலக மாரப்பன, ஜனாதிபதி சட்டத்தரணி கே.என்.சொக்ஸி, டிரோன் பெர்னாண்டோ, கருணாசேன கொடித்துவக்கு போன்றோரே இந்தப் பிரேரணையில் ஒப்பமிடவில்லை.

இந்தப் பிரேரணையில் பிரதம நீதியரசருக்கு எதிராக 43 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுகளில் சில மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என்று இந்த மூத்த உறுப்பினர்கள் வலியுறுத்தி வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுப்பதாயின் அந்தப் பிரேரணை சபையில் மூன்றில் ஒரு பங்குக்கு குறையாத எம்.பிக்களினால் (225 பேர் கொண்ட சபையில் 75 பேரினால்) முன்மொழியப்படவேண்டும்.

தற்போதைய நாடாளுமன்றத்தில அங்கம் வகிக்கும் ஐ.தே.கட்சியின் 89 எம்.பிக்களில் 78 பேர் மேற்படிப் பிரேரணையை முன்மொழிந்து ஒப்பமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-9)

---

## சமாதான......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சிப்பதாகவும் அதற்கு சில முட்டுக்கட்டைகள் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

"புலிகளைப் பேச்சுகளில் ஈடுபடுத்துவதற்கான சூழ்நிலைகள் தென்படுகின்றன. இதன் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வொன்று காணப்பட்டால அதனால் அதிக இலாபம் அடைபவர்கள் சிங்கள மக்களே" - என்றும் அவர் சொன்னார்.

புலிகளுடன் பேச்சு நடத்துவதற்குத தொடர்ந்தும் தாங்கள் முயற்சிகள் மேற்கொள்வதாக அவர் குறிப்பிட்டார்.

சமாதானத்தில் தனது விருப்பும், ஈடுபாடும் சிறிதளவும் குறைந்துவிடவில்லை என்று கூறிய அவர், சகல மக்களுக்கும் நன்மை அளிக்கும் விதத்தில் தமிழ் மக்களின் அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது. இதற்காகவே புதிய அரசமைப்புச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்ற அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது - என்றும் குறிப்பிட்டார்.(உ-7-9)

---

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலைத் துறைமுகத்தை விடுதலைப் புலிகள் தாக்கத் திட்டமிட்டிருப்பதாக ஸ்ரீலங்காப் படையினரின் உளவுத்துறைத் தகவல்கள் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

கிழக்கில் கடந்த சில மாதங்களாக புலிகளின் தளபதிகளில் ஒருவரான கருணா தங்கியிருப்பது குறித்தும் படைத்தரப்பில் பல்வேறு சந்தேகங்களைக் கிளப்பிவிட்டுள்ளது.

(க-9)


கணக்கீடு
K.PARTHEEPAN (B.B.A)
சாவ. ஞானோதயா ஆசிரியர்

A/L 2003
தனிவியாபார முடிவுக்கணக்கு
ஆரம்பம்: 02-06-2001 (10a.m.)

ஸ்ரீகாந்
கல்வி நிலையம்
K.K.S. வீதி - இணுவில்
88355



BRIGHTMAN
கல்வி நிலையம்
பிறவுண் வீதி, யாழ்நகர்
A/L 2002 PHYSICS
HEAT
By: Jeyaseelan
ஆரம்பம்: 01.06.2001 Fri.3.00p.m.
O/L DAY CLASS வகுப்புகள் நடைபெறுகின்றன.
(88371)



SUBRA 14
சித்தன்கேணி
பௌதிகவியல்
2002
Paper Class
Tu.-Thu.- Fri. 6-7
2003 A/L
Mo.- Tu. Fri. 3-4
ஆசிரியர்:
S.ஐங்கரன்
நாடகமும் அரங்கியலும்
2001
Paper Class
mon.Tu.Wed.Thu.Fri. 6-7
ஆசிரியர்:
P.கணேசராஜா
(C/16100)



COLLEGE OF COMMERCE
(Near J/Sacred Heart College)
KARAVEDDY
வெளிவாரிப் பட்டப்படிப்புகள் (யாழ்., பேராதனை)
2002 க்குரிய புதிய வகுப்புகள்
ஆரம்பம்:G.A.Q, BA Part I, II
1 St Com. & Other Parts
02-06-2001
※ S.L.A.S. வகுப்புகள் நடைபெறுகின்றன.
(88405) -நிர்வாகி.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.05.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.